# இலங்கையில் 4-வது தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெறும்


Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாலபெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 327
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க மார்கழி 21 ஷவ்வால் 4 வெள்ளிக்கிழமை [5- 1-68]


சென்னை, ஜன. 4

மூன்றுவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுபிரான்சின் தலைநகரான பாரிசில் 1970-ம் ஆண்டின் முற்பகுதியில் நடைபெறக்கூடுமென உலகத்தமிழாராய்ச்சிக்கழகத்தின் தலைவர் பேராசிரியர் பிலியேசா தெரிவித்தார்.

4வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு இலங்கையில் நடைபெறலாம் என்றும் அவர் கூறினர்.

சென்னை நகரில் இப்பொழுது இரண்டாவது உலகத் தமிழாராச்சி மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதல் மகாநாடு 1966-ம் ஆண்டில் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்றது.

மூன்றுவது மகாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு விரைவில் ஒரு குழு நியமிக்கப்படுமெனவும் தெரிகிறது.

# ஆராய்ச்சிக் கட்டுரைகளை அறிஞர்கள் ஆராய்கின்றனர்

## தமிழாராய்ச்சி மகாநாட்டில் புதிய உத்வேகம்

### ஜனாதிபதியும் அண்ணாவும் மதுரை பயணம்

சென்னை, ஜன. 4

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில் நேற்று கோலாகலமாக ஆரம்பமான இரண்டாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு இன்று அமைதியான முறையில் உலக நாடுகள் பலவற்றைச் சேர்ந்த தமிழறிஞர்கள் சமர்ப்பித்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளை பரிசீலனைசெய்யத்தொடங்கியது.

மாநாட்டின் தலைவர் பேராசிரியர் ஜான் பிலியேசாவும், பேராசிரியர் கே. கே. பிள்ளையும் இன்று தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்து கருத்துரை வழங்கினுர்கள்.

## தமிழ் மகாநாட்டில், இலங்கை அமைச்சர் வெளியிட்ட தகவல்

### இந்திய அறிஞர்கள் ஆச்சரியம்

(நமது விசேஷ நிருபர் கே. நடராசா)

சென்னை, ஜன.4

பல்கலைக்கழகக் கல்வியை தேசிய மொழிகளாகிய தமிழ்-சிங்கள மொழிகளில் புகட்டுவதற்கு இலங்கை அரசாங்கம் செய்துள்ள முடிவு பற்றி இலங்கையின் உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் திருச்செல்வம் நேற்று தமிழாராய்ச்சிமகாநாட்டில் அறிவித்தபொழுது அனேகர் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனுர்கள். இதற்குக் காரணம் இந்தியா கூட இன்னும் இத்தநிலையை அடையாமல் இருப்பதுதான்.

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை ஜனாதிபதி சாகிர் ஹுசெயின் அங்குரார்ப்பணம் செய்துவைத்த பின்னர் செனட்டர் திருச்செல்வம் பேசினுர்.

தமிழ் அறிஞர்களதும் தலைவர்களது சொற்பொழிவுகளைக் கேட்பதற்கு மெரினாகடற்கரையில் சுமார் 5 லட்சம் மக்கள் திரண்டிருந்தார்கள்.

பல்கலைக்கழகக் கல்வியை புகட்டக்கூடிய அளவுக்கு தமிழ்மொழி வளர்ச்சியடைந்துள்ள இன்றைய நிலையில் விஞ்ஞான, தொழில்நுட்ப அரசியல் சம்பந்தமான பதங்களை தமிழ்பேசும் உலகம் முழுவதும் உபயோகிக்கக் கூடியதான பொது வார்த்தைகளை தமிழ்அறிஞர்களும் சர்வதேச தமிழ்ஆராய்ச்சி நிலையங்களும் உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று இலங்கை மந்திரி கருத்து வெளியிட்டார்.

இம்மாதிரி ஒருமுகமான கலைச்சொற்களை உருவாக்கினுல் தமிழ் மக்களுக்கிடையில் தமிழ் இலக்கியங்களையும் பாடப்புத்தகங்களையும் பரிவர்த்தனை செய்துகொள்வதற்கு வசதியாக இருக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

## 631 கைதிகள் விடுதலை

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி தமிழக அரசாங்கம் கைதிகளுக்கு அளித்த பொது மன்னிப்புத் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையைச் சேர்ந்த 631 கைதிகள் நேற்று விடுதலை பெற்றனர். இவர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.


(5-ம் பக்கம் பார்க்க)



தமிழாராய்ச்சி மகாநாட்டு
முதல்நாள் நிகழ்ச்சி
விபரங்களை 3-ம், 6-ம்
பக்கங்களில் காணலாம்


## ஒரு மாதத்தில் ஒன்றரைலட்சம் ரூபாய்

### யாழ். மாவட்டத்தில் சுவீப் டிக்கட் விற்பனை

யாழ்ப்பாணம், வெள்ளி

1965-ம் ஆண்டு யாழ்ப்பாணப் பகுதியில் ஒரு மாதத்தில் 30,000 ரூபாவிற்கே தேசிய சுவீப் டிக்கெட்டுகள் விற்பனையாகின. தற்பொழுது ஒரு மாதத்திற்கு ஒன்றரை லட்சம் ரூபாவிற்கு சுவீப் டிக்கெட்டுகள் இங்கு விற்பனையாகின்றன. யாழ்ப்பாண மக்களுக்கு லொத்தர் சபையில் உள்ள நம்பிக்கையும், அபிமானமுமே இதற்குக் காரணம்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி திறந்த வெளியரங்கில் 175-து தேசிய சுவீப்சீட்டிழுப்பு நேற்று மாலை நடைபெற்றபோது தேசிய லொத்தர்சபை டைரக்டர் திரு சி. என். டி. போகல்லகம மேற்கண்டவாறுகூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது:-

வட பகுதியில் மூன்றுவது முறையாக சுவீப் இழுக்கப்படுகிறது. இந்த சீட்டிழுப்பில் மக்கள் பூரண திருப்தியடைந்துள்ளார்கள்என்பது டிக்கெட் விற்பனையிலிருந்து தெரிகிறது. இந்த சுவீப் டிக்கெட்டில் நூற்றுக்கு 40 வீதம் அரசாங்கத்திற்கு வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு அரசாங்கத்திற்கு 160 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இப்பணம், இந்நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உதவுகிறது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் குத்துவிளக்கேற்றிப் பேசும்போது கூறியதாவது:-

இந்நாட்டில் ஒவ்வொரு கிழமையும் ஒரு லட்சாதிபதியை உருவாக்குவதுதான் இச்சீட்டிழுப்பின் அடிப்படை நோக்கமாக இருக்கக்கூடாது. லட்சியவாதிகளை உருவாக்குவதே இதன் நோக்கமாக இருக்கவேண்டும். நாட்டின் அபிவிருத்தியைக்கருதி அர


[8-பக்கம் ம் பார்க்க]


### சாவகச்சேரியில் இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற தேசிய லொத்தர் சபையின் 175-வது சுவீப் முடிவுகள் பின்வருமாறு:—

**1-வது பரிசு**
08 P 0114 ரூ. 100,000

**2-வது பரிசு**
09 J 0548 ரூ. 40,000

**3-வது பரிசு**
31 V 0830 ரூ. 10,000

தலா ரூபா 1250 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 13 Z 0399 | 12 O 0979 |
| 06 H 0237 | 48 J 0104 |
| 34 R 0423 | 50 X 0868 |
| 38 E 0234 | 49 M 0911 |
| 10 M 0066 | 35 Q 0938 |
| 06 L 0323 | 04 F 0703 |
| 01 V 0527 | 24 Q 0698 |
| 24 J 0585 | 52 G 0495 |
| 13 F 0644 | 05 D 0225 |


(8-ம் பக்கம் பார்க்க)


### ஹுசையினுக்கு 'இலக்கிய கலாநிதி'

மதுரை, ஜன. 4

இந்திய ஜனதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசையினுக்கு மதுரைப் பல்கலைக்கழகம 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டத்தை இன்று வழங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவு தொழிலாளர் சங்கம்

முல்லைத்தீவு, வியாழன்

இப்பகுதிக் கூட்டுறவுத் தொழிலாளரின் நலன்களைக் கவனிக்கவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் தொழிலாளர் ஒன்றுபட்டு ஒரு சங்கம் நிறுவ வேண்டுமென்ற எண்ணமும் கோரிக்கையும் இன்று வெற்றி அடைந்துள்ளது. என்று திரு. வி. ஜெயபாலன் முல்லைத்தீவு ப. நோ. கூ. சமாஜத்தில் முல்லைத்தீவு வட்டாரக் கூட்டுறவுத் தொழிலாளர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கையில் கூறினார். பின்பு புதுவருட உத்தியோகத்தர்களாகக் கீழ்க்காணுவோர் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர்கள்: திரு. எம். எஸ் வஸ்தியாம்பிள்ளை, திரு. வி. விஜயரட்ணம், திரு. க. திருநாவுக்கரசு, தலைவர்: திரு. வி. ஜெயபாலன், செயலாளர்: திரு. செ. வயிரவநாதன், தனாதிகாரி: திரு. செ. இராசரட்ணம், உபகாரியதரிசி: திரு. வி. செந்தில்வேல். நிர்வாகசபை அங்கத்தவர்களாக திரு. ந. குமாரசாமி, திரு. த. வீரசிங்கம், திரு. நா. பாலசிங்கம், திரு. க. பாலசிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மருந்து தெளிக்கவில்லை

பண்டத்தரிப்பு, வியா

சுகாதாரப் பகுதியினர், அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தைத் தொடர்ந்து கிணறுகளுக்கு குளோறின் மருந்து போடுவதாக அறிவித்திருந்தும் இன்னும் முன் குறிப்பிட்டபடி மருந்து போடப்படவில்லை. கிணற்று நீரை உபயோகிப்பதனால் பல நோய்கள் ஏற்படுமென்று அவர்கள் கூறியும் இதுபற்றி நடவடிக்கை எடுக்காதது பெரும் வியப்பைஏற்படுத்தியுள்ளது.

## கார்சாரதி தாக்கப்பட்டார்

கொடிகாமம், வியா.

கொடிகாமத்தில் கார் சாரதியான ஆசைப்பிள்ளை தம்பிப்பிள்ளை என்பவர் நேற்று முன்தினம்காலை மூவரால் தாக்கப்பட்டு சாவகச்சேரிஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவரது நிலைமை மோசமானதாக காணப்பட்டதால் உடனடியாக யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் சம்பந்தமாக சாவகச்சேரி பொலிசார் மூவரைத் தேடிவருகின்றனர். இதுவரை எவரும் கைதாகவில்லை.

கார் சாரதியான தம்பிப்பிள்ளை சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது தாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. சேதமடைந்த சைக்கிளை பொலிசார் பாரமெடுதனர்.

நேற்று முன் தினமிரவு பொலிசார் சந்தைப்பகுதியில் ரோந்து சுற்றினார்கள் இன்று அதிகாலை முதல் மேலதிக பொலிசார் கொடிகாம சந்தைப்பகுதியில் கடமை யாற்றுகின்றனர்.

## இடமாற்றம் ரத்து

வல்வெட்டித்துறை, வியா

வல்வெட்டித்துறை பட்டின சபையின் பிரதம குமாஸ்தாவான திரு. இராசரத்தினத்தின் இடமாற்றத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு பட்டினசபைத் தலைவர் திரு. எம். இரத்தினவடிவேலு ஸ்தலஸ்தாபன இலாகாவைக் கேட்டுக்கொண்டதன் பேரில் அவரது இடமாற்றம் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமாக பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நன்றி தெரிவிக்கும் பிரேரணையொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு ஸ்தலஸ்தாபன இலாகாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

## அறிவித்தல்
## மின் வினியோகம் தடைப்படல்

புங்கன்குளம், கனகரத்தினம் வீதி உப மின் நிலையத்திற்கு மின் சக்தியை ஊட்டும் வடம் சேதமுற்றிருப்பதால், சம்பந்தப்பட்ட உப மின் நிலையத்தால் பயனடையும் மின் பாவனையாளருக்கான மின்சார சேவை தடைப்பட்டுள்ளது.

அரசாங்கமின்சாரவேலைப் பகுதியினர் சேதமுற்றிருக்கும்வடத்தைப் பழுதுபார்த்ததும் மின் பாவனையாளர்களுக்குஏற்பட்டிருக்கும்தடை நீங்கிவிடும், என்பதை இத்தால் பொது மக்கள் கவனத்திற்கு அறியத்தருகிறேன். மேலும் அரசாங்க மின்சாரப் பகுதியினர் மின் வினியோகத்தை மட்டுப்படுத்தி இருப்பதன் காரணமாக இரவு 8-00 மணிக்கு மேல் தான் தெருவிளக்குகள் ஏற்றப்படுமென்பதையும் பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

கப்சன் செல்வராசா
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
4-1-1968. 398

## "குடிநீர் வசதி அளிக்குக"

உடுவில், வியாழன்

"கந்தரோடைக் கிராமத்தில் நல்ல தண்ணீர் பிரச்னை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டுவருகிறது. கந்தரோடைக்கிராமத்து கிணறுகள் எல்லாம் உவர் நீராக மாறிக்கொண்டு வருவதே இதற்குக் காரணம். கிராம மக்கள் நல்ல தண்ணீர் தேடித் தூர இடங்களுக்குச் செல்லவேண்டி இருக்கிறது. இக்கிராம மக்களின் நலன் கருதிக் குழாய்நீர் மூலம் நீர் கிடைக்க வசதியளிக்க வேண்டும்" எனக் கந்தரோடை கிராமமக்கள் சார்பில் கந்தரோடை சனசமூக நிலையத் தலைவர் சுன்னாகம் பட்டினசபைத்தலைவர் திரு. பொ. நாகலிங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் கேட்டுள்ளார்.

## கிணற்றில் மூழ்கி மரணம்

உடுவில், வியாளன்

உடுவில் கொல்லனேலையைச் சேர்ந்த ஆறுமுகம் நேற்று கிணற்றுள் மூழ்கி மரணமானார். வயல்கிணற்றுள் குளித்தபோது தவறுதலாக கிணற்றுள் வீழ்ந்த மேற்படி நபர் நீரில் மூழ்கி மரணமானார்.

காலஞ்சென்ற ஆறுமுகம் ஒரு சீவல் தொழிலாளியென்றும் வழக்கமாக குளிக்கும் கிணற்றில் சம்பவ தினத்தன்றும் குளித்தபோது தற்செயலாக தவறி கிணற்றுள் வீழ்ந்து நீரில் மூழ்கி மரணமானார் என்றும் மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

கிணற்றுள் இறந்து கிடப்பதாக சுன்னாகம் பொலிசுக்குத் தகவல் கிடைத்தபோது சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. அ. சிவபாதம் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று இறந்தவரை வெளியே தூக்கினார்என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. காங்கேசன்துறை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி திரு சுப்பிரமணியம் பிரேத பரிசோதனைநடாத்தினார். உடுவில்மல்லாகம் கோவிற்பற்று மரணவிசாரணை அதிகாரி திரு. சி. தாமோதரம்பிள்ளை மரணவிசாரணை நடத்தினார். கிணற்றில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## வரி விளம்பரம்

### நன்றி நவிலல்

31-12-67 அன்று சிவபதமடைந்த எங்கள் தகப்பனார் திரு. பண்டாரம்தம்பிப்பிள்ளை அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். கணக்காளன் - ப. த. நடராசாவும். சகோதரர்களும், கந்தர்மடம், மணல்தறை லேன். 2041

The Jaffna Education Centre, 304/3, Hsopital Road, Jaffna. Coursse of study English Tamil Media G. C. E. prep G. C. E. O. L. Arts & Science G. C. E A. L. Arts & Science G. A. Q. Sinhalese, Special English Commercial Subjects, Bala Pandit & Pandit. Practicals for Advance Level 1967 Term begins on 8-1-68. 2038

### கல்வி

மாணவ ஆசிரியர் பரீட்சைக்கான விபரங்களும் விண்ணப்பப் படிவமும் 50 சதம். மேலதிக விண்ணப்பப்படிவம் ஒன்று 10 சதம். அஞ்சற்கட்டளை / முத்திரைகள் அனுப்புக. 'அறிவகம்', 178, சிறீகுணனந்த மாவத்தை, கொழும்பு. 2040

பரீட்சை

மாணவ ஆசிரிய பரீட்சை 1968 விண்ணப்பப் படிவங்களுக்கு 5 பத்துச் சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். வகுப்புக்களும் நடாத்தப்படும். வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 2021

3—5 வயதுவரையுள்ள சிறுவர்கள், மொன்ரிசோறி முறையாகவும், தற்போதைய புதியமுறைகளை அனுசரித்தும் கல்வி கற்பிக்கப்படும். இன்னும் சில மாணவர் சேர இடமுண்டு. விபரங்களுக்கு: அன்பு பாலர் பாடசாலை, [சிதாசோடாக்கம்பனியருகே] 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2034

### விற்பனைக்கு

பொங்கோஸ்

நல்ல நிலையிலுள்ள பொங்கோஸ் (தாளவாத்தியக் கருவி) சகாய விற்பனைக்கு உண்டு. சோ. சபானந்தன், ['சித்ரா மெல்லிசைக்குழு'] சந்தை வீதி, உடுப்பிட்டி. 2030


நியூ காலிங்கள்
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.-ஜெமினி
நடித்த
முகராசி

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00 & 9-45 P. M.
Elvis Presley
in
PARADISE
HAWAIIAN STYLE

REGAL JAFFNA
4-45, 7-00 & 9-45 p.m.
Audie Murphy
Merry Anders
in
Columbia's
THE QUICK GUN
[Adults Only]


## மீன்பிடி இலாகா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த பண்ணை, பாஷையூர் போன்ற பகுதிகளில் டைனமெற் வெடிமூலம் அடிக்கடி மீன்பிடிக்கின்றார்கள் என்று தகவல் கிடைத்துள்ளதால் யாழ்ப்பாண மீன்பிடி இலாகாவைச்சேர்ந்தபரிசோதகர்கள் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். (நி)


உங்களுக்குத் தெரியுமா?

எல்லாப் பகிரங்கப் பரீட்சைகளுக்கும் நேர்முகப் பரீட்சைகளுக்கும், மாணவர்க்கும் உதவும் ஒரே நூல்—

பொது அறிவு (ஒன்றில் யாவும்)
க. தணிகாசலம் எழுதியது.
உள்ளூர் அறிவு, விவேகம், கணிதம் முதலிய யாவும் அடங்கியது.
எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். 396

ராதா மணிமார்க்
சந்தனுதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.
தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

—ஏகவிநியோகஸ்தர்கள்:—

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

58, கே. கே. எஸ். றோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

2-வது வெற்றிவாரம்
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
விஜிதா [ஹட்டன்]
மொடேர்ன் [பதுளை]



சுந்தரராஜன்
ஏ.வி.எம் ராஜன்
முத்துராமன்



ஜெயலலிதா
நாகேஷ்
மற்றும்
பலர்
நடிக்கும்
மேஜர் சந்திரகாந்த்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் உலகப் பொது மொழி; கலாசாரத்தின் ஒருகளஞ்சியம்"

## சோழமன்னரின் தூதர் பற்றிசீனர் ஆராய்ச்சி

### தனிநாயகஅடிகள் தகவல்

### ஈ. வெ. ரா. கருத்துக்கும் பதில்

சென்னை, ஜன. 4

"சீன தேசத்தை சேர்ந்த பேராசிரியர் லோ என்பவர் சோழ மன்னரின் தூதராக விளங்கிய சோழசமுத்திரம் என்பவரின் வரலாற்றை சீன நூல்களில் காணப்படும் குறிப்பைக் கொண்டு எழுதிவருகிறார். இத்தகவலை உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் காரியதரிசிகளில் ஒருவரான சேவியர் தனிநாயகம் அடிகள் இங்கு தெரிவித்தார்.

உலகில் பல்வேறு நாடுகளில் முப்பதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டவர் தமிழிசை பற்றி ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். தமிழ் இயல் பற்றி ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். அவர்கள் அனைவரையும் ஒருங்கிணைப்பதே தமிழ்மகாநாட்டுக் கருத்தரங்கின் நோக்கம்" என்றும் தனிநாயக அடிகளார் கூறினார்.

ஜெர்மனியில் உள்ள ஹைடல்பர்க் பல்கலைக்கழகத்தில் தமிழியலை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மூன்று பேர் இக்கருத்தரங்கில் கலந்துகொள்கிறார்கள். சோழர் ஆட்சியின் அமைப்பு முறை பற்றி டோக்கியோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நொபுருகரஷிமா ஆராய்ந்து கட்டுரை எழுதியிருக்கிறார் என்றும் தனிநாயக அடிகளார் கூறினார்.

"தமிழ் மொழியைக் காட்டுமிராண்டி மொழி என்று ஈ. வெ. ரா. பெரியார் கூறியிருப்பதுபற்றி நிருபர்கள் கேட்டதற்கு அது அவரது சொந்தக்கருத்தாக இருக்கலாமென்றும் தாம் அதுபற்றி எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை யென்றும் தனிநாயக அடிகள் கூறினார். ஆயினும் நிருபர்களின் வற்புறுத்தலின் பேரில் அடிகளார் பின்வருமாறு சொன்னார்.

தமிழ், வளம் மிகுந்த மொழி, இலக்கியச்செல்வம் படைத்தது. பக்தி விஷயங்களும், வேறுபல கருத்துக்களும் தமிழ்மொழியில் மிக அற்புதமாகக் கையாளப் பட்டுள்ளன. எந்த நாகரிக மொழிக்கும்இதுவேதேவை. எனவே இம்மொழியைக் காட்டுமிராண்டி மொழி என்று எவ்வாறு கூற இயலும் என்பதே புரியவில்லை. பல நவீன சிந்தனைகளுக்கும், இம்மொழியை மிக எளிதாக திரு. அண்ணாதுரை, திரு. சி. சுப்பிரமணியம் போன்றவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஆகவே திரு. ஈ. வெ. ரா. கூறியதைப் பற்றி தமிழ் ஆராய்ச்சி கழகத்துடன் சம்பந்தப் பட்டவர்கள் கவலை காட்டவில்லை என்றும் தனிநாயக அடிகளார் தெரிவித்தார்.

## இந்திய ஜனாதிபதி புகழ்மாலை

## "தமிழ் இணைப்பு மொழி; ஆட்சி மொழியாவது உறுதி"

— அண்ணா

### நாலடியாரும் சிந்தாமணியும் பிறமொழிகளில் வெளியாகும்

### தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிவிபரம்

சென்னை, ஜன, 4

**"வணக்கம்" என்ற தூயதமிழில் இந்தியக் குடியரசின் அதிபரும் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவருமான டாக்டர் ஸாகிர் ஹுசையின் இரு கரமும் கூப்பியபடி கூறியபோது இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொண்டிருந்த லட்சக்கணக்கான மக்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்குமுகமாக கரகோஷம் செய்தபோது அந்த ஒலி அடங்குவதற்கு சிலநிமிஷ நேரம் சென்றது. இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைத் தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை மாநகரில் டாக்டர் ஸாகிர் ஹுசையின் நேற்று மாலை ஆரம்பித்துவைத்தார்.**

வடஇந்தியாவையும் தென்னிந்தியாவையும் தமிழ்மொழி இணைத்து வைத்துள்ளதென்று கூறிய டாக்டர் ஸாகிர் ஹுசையின் உலகப்பொதுமொழியாகவும் கலாசாரத்தின் ஒரு களஞ்சியமாகவும் தமிழ்மொழி விளங்குகிறது என்று கூறினார். பாரதத்தின் ஐக்கியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இம்மகாநாட்டுக்குத் தலைமை வகித்து உரைநிகழ்த்திய தமிழக முதல் அமைச்சர் திரு. அண்ணாதுரை பேசுகையில், தமிழ் இணைப்பு மொழியாகவும், பொது மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஒருநாள் விளங்கத்தான் போகிறது என்றார். தமிழ் மொழிக்குரிய அந்தஸ்து, உரிமை கிடைக்காவிட்டால் அதை தமிழ்மக்கள் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்றும் அண்ணாதுரை கூறினார்.

இலங்கை உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் பேசுகையில், யாழ்ப்பாணத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு வைத்தியக்கல்லூரியில் வைத்தியப் படிப்பு தமிழ்மொழிமூலம் அளிக்கப்பட்டது என்றார்.

நாலடியார், சிந்தாமணி, திருக்குறள் ஆகிய தமிழ் நூல்கள், பிரெஞ்சு, அராபிய, ஆங்கிலம் முதலிய மொழிகளில் ஐ. நா. கல்வி பண்பாட்டுக்கழகம் வெளியிட விருப்பதாக அக்கழகத்தின் பிராந்தியத் தலைவர் திரு. சேஷையா தெரிவித்தார்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, நேற்றுச் சென்னையில் கோலாகலமாக ஆரம்பமாகியது, சென்னை நகரமே திருவிழாக்கோலம் பூண்டுள்ளது. தமிழகமே திரண்டுவந்திருப்பது போலச் சென்னை நகரம் காட்சியளிக்கிறது.

உலகப் பிரசித்திபெற்ற சென்னைமரீனாகடற்கரையை நோக்கி ஒரு மாபெரும் ஊர்வலம் நேற்றுமாலை ஊர்ந்து சென்றது. இக்கண்கொள்ளாக்காட்சியை மவுண்ட்ரோட்டிலுள்ள கலைக்கல்லூரி அருகே அமைக்கப்பட்ட விசேஷ மேடையொன்றிலிருந்து, இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின் பார்வையிட்டார்.

ஊர்வலம் மரீனா கடற்கரை வந்தடைந்ததும், மாநாடு மங்களகரமான நாகசுர இசையுடன் ஆரம்பமாகியது.

'தமிழிசை மன்னர்' திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் வாழ்த்துப்பா பாடினார்.

அதன் பின்னர், இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயினுக்குச் சென்னை மாநகரசபையின் வரவேற்புரையை, நகரமேயர் திரு. அபிபுல்லா பேக் வாசித்தளித்தார்.

## "தமிழ்மொழியை அரியாசனம் ஏற்ற உறுதிகொள்வோம்"

### தமிழாராய்ச்சி மகாநாட்டில் அண்ணா தலைமையுரை

தமிழாராய்ச்சி மகாநாட்டிற்குத் தலைமை வகித்த தமிழக முதன்மந்திரியும் அறிஞருமான திரு. சி.என். அண்ணாதுரை உரை நிகழ்த்துகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ஸாகிர்ஹுசையின் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டைத் தொடக்கிவைத்திருக்கிறார். அறிஞரும் சிறந்த பண்பாடுள்ளவருமான பெருமகனார் இந்த மகாநாட்டை ஆரம்பித்து வைத்திருப்பது நமது தமிழ்மொழியின் ஆராய்ச்சி நல்ல கட்டத்தை அடையுமென்ற நம்பிக்கையை அளிப்பதாக உள்ளது

தொன்மையும் வளமும் உள்ள நமது தமிழ்மொழி வாழ்வு பெற்றிருப்பதுடன் வாழச்செய்தும் ருக்கிறது என்ற பேருண்மையை ஆதாரத்துடன் நிலைநாட்ட, இந்த மகாநாடு வழிகாட்டும். தமிழ் மொழி கீழைத்தேய நாடுகளில் மட்டுமன்றி உலகத்தின் இதரபகுதிகளிலும் தமிழ்க்கலாசாரத்தைப்பரப்பியிருக்கிறதென்பதை உலகம் ஓரளவுக்கு அறிந்திருக்கிறது. இந்த உண்மையைப் பெருமளவில், முழு அளவில் உலகம் அறிந்து தெரிந்து, புரிந்துகொள்ள இதந் மகாநாடு உதவுமென்ற நம்பிக்கை இருக்கிறது. இந்தமகாநாட்டிலே முப்பதுக்குமேற்பட்ட உலக நாடுகளின பிரதிநிதிகள், அறிஞர்கள், ஆராய்வாளர்கள் கலந்துகொள்கின்றனர். தமிழ் நாட்டின் அறிஞர்கள், பெருமக்கள் மட்டுமல்ல அதைத் தொட்டுள்ள மலேசியா, சிங்கப்பூர் அதையடுத்துள்ள தாய்லாந்து, இந்தோனேஷியா விலிருந்தும் இவற்றுக்கு அப்பாற்பட்ட சோவியத் ரஷ்யா, செக்கோஸ்லேவாக்கியா, போலாந்து, ஆஸ்திரியா, ஹங்கேரி, இங்கிலாந்து, அமெரிக்கா, தாய்வான் இன்னும் பல நாடுகளிலிருந்தும் வந்துள்ள அறிஞர்கள், ஆய்வாளர்கள், இம் மகாநாட்டில் கலந்துகொள்கின்றனர். இத்தனை நாடுகளுக்கும் அறிவகமாக விளங்கிய தமிழ், தமிழ்ப் பண்பாடு, நம்முடைய இந்திய உபகண்டத்தினர் நமக்கு அருகிலேயே இருக்கின்ற இதர பல மாநிலங்களில் சிறப்பு இடம்பெற முடியாதிருப்பது எண்ணி எண்ணி வருந்தத்தக்கது.

உலகத்துக்கு திருக்குறளை அளித்த, அதன் சொந்தக்காரர்கள் நாம் என்று பெருமை கொள்கிறோம். "எப்பொருள் யார், யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற உயர்ந்த தத்துவத்தை அளித்த திருக்குறளின் சொந்தக்காரர் நாம் என்று உரிமை பாராட்டுகிறோம். இந்த மாண்புபடைத்த தமிழ் மொழியின் நல்லபண்பை, மரபை, நற்கருத்துக்களை உலகுக்குப் பரப்பவும், தமிழர் புதிய வலிமையையும் பொலிவையும் பெறவும், வாழ்வுக்கு நல்ல ஊட்டத்தைப் பெறவும் இந்த மகாநாடு வழிவகுக்குமென்ற நம்பிக்கை, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்களுக்கு இருப்பது போலவே எனக்கும் இருக்கிறது.

நம்முடைய தமிழ்மொழி உரிய ஏற்றத்தைப் பெறும், நம்முடைய தமிழ்மொழியின் அருமை பெருமைகளை மற்றவர்களும் அறிந்து, புரிந்து, அதன் அருகில் வந்து தமிழ்மொழியை அரியாசனத்தில் ஏற்ற உறுதிகொள்வோம்.

புதிய வலிமையையும் பொலிவையும் தமிழ்மொழியும், தமிழ்நாடும் பெறும் என்பதற்கு நல்ல பண்பாடு [illegible] குடியரசுத் தலைவர்

## ராஷ்டிரபதிக்கு நகராட்சி மன்றம் பாராட்டு

டாக்டர் சாகிர் ஹுசெயின், இந்திய நாட்டின் தலைசிறந்த கல்விமான்களில் ஒருவரென்றும், காந்தீய போதனைகளைக் கடைப்பிடித்து, விசேஷமாக காந்தியின் வார்தாக் கல்விமுறையைப்பின்பற்றி, அரிய பணிகளை ஆற்றியுள்ளாரென்றும் வரவேற்புரையில் மேயர் கூறினார்.

ஆதாரக் கல்வியில் டாக்டர் சாகிர் ஹுசெயின் அருஞ்சேவை ஆற்றியுள்ளார் என்று குறிப்பிட்ட மேயர், அலிகார் பல்கலைக்கழக உபவேந்தர் பதவியிலிருந்து, அப்பல்கலைக்கழகத்தைச் சிறப்புற நடத்தியதையும் நினைவூட்டினார்.

பல துறைகளிலும் நாட்டுக்குச் சிறப்புமிகு சேவை செய்த டாக்டர் பின்னர் பீஹார் கவர்னராகப்பதவி ஆற்றியதையும், இப்போது நாட்டின் ராஷ்டிரபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையையும் மேயர் குறிப்பிட்டார். இத்தகைய ஒரு மேதையை வரவேற்பதில் சென்னை பெருமிதம் அடைவதாக அவர் கூறினார்.

## நெடுஞ்செழியன் வரவேற்புரை

அடுத்து, தமிழகக் கல்வி மந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன், மாநாட்டுக்கு வந்துள்ள பல நாட்டுப் பிரதிநிதிகளையும், பார்வையாளர்களையும் வரவேற்றுப் பேசினார். தமிழக அரசின் சார்பிலும், மாநாட்டின் சார்பிலும் அவர்களை வரவேற்பதாக அவர் கூறினார்.

இதனைத் தொடக்கிவைத்ததிலிருந்து நம்பிக்கைகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

எல்லோருடைய ஒத்துழைப்புடனும் ஒழுங்கு

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தன்னுடைய மனிதத் தன்மையை உணர்ந்துவிட்ட ஒரு மனிதன் கடவுளுக்கு மாத்திரமே பயப்படுவான். வேறு யாருக்கும் அஞ்சமாட்டான்.

— காந்திமகான்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஹு மார்கழி மீ 21உ (5-1-68)


## உணவு உற்பத்தியில் இராணுவம்

இலங்கை இராணுவத்தினரும் காடுகளை அழித்து களனிகளாக்கவும் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் முன்வரப்போகிறார்கள். இதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி பலருக்கும் மகிழ்ச்சியளிக்கும். இத்திட்டத்தைக் கொண்டுவந்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

இதில் அவசரப்படாமல் ஒருங்கிணைக்கப்பட்ட ஒழுங்கானதிட்டம் தயாரித்து சரியான முறையில் இதைச் செயல்படுத்த வேண்டும்.

அரசாங்கத்தின் உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கத்தில் ஓர் அம்சமாக தேசிய உணவு உற்பத்தியை அதிகரிப்பதில இராணுவத்தினரும் பங்கு கொள்ள வாய்ப்பளிக்கும் முகமாக இத்திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இத்துடன் [1] இராணுவத்தினர் தமது உணவுத்தேவைகளில் தாமே சுயதேவையைப் பூர்த்திசெய்து கொள்ளவும், [2] இராணுவப் படையினரின் வாழ்க்கைச் செலவைக்குறைக்கவும், [3] ஓய்வுபெற்ற இராணுவப் படையினருக்கு வேலைவாய்ப்பளிக்கவும் இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. இத்திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இராணுவப் பண்ணைகளும், சேமநல கழகங்களும் அமைக்கப்படுமென்றும் இத்திட்டத்தின் முதல் கட்டம் செயல்படத் தொடங்கியதும் தியத்தலாவை, திருகோணமலை, கட்டுநாயக்கா, பணகொட, கட்டுக்குருந்தை ஆகிய இடங்களில் தற்போதுள்ள இராணுவ முகாம்களையடுத்துள்ள 9000 ஏக்கர் நிலம் விவசாயத்துக்குக் கொண்டுவரப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

நமது நாட்டுக்கு வெளிநாட்டுப்படையெடுப்பு அபாயம் இல்லை என்பது தெளிவு. எல்லைத்தகராறுகளும் தொல்லைகளும் பிரச்னைகளும்கூடக் கிடையாது. சட்டவிரோதக் குடியேற்றத்தடுப்பு, கள்ளக்கடத்தல் தடுப்பு என்ற பேரில் நாட்டின் சில பகுதிகளில் குறிப்பாக வடபகுதியில் ஒரு பகுதி இராணுவத்தினரும், கடற்படையினரும் முகாமிட்டுள்ளனர். [அவ]ர்க்கடத்தலும் சட்டவிரோதக் குடியேற்றமும் முற்றாக நிறுத்தப்பட்டுவிட்டதா என்பது வேறு விஷயம். நாட்டில் அவசரகால நிலை ஏற்பட்டு உள்நாட்டில் அமைதிக்குலைவு ஏற்பட்டிருக்கும் போது, பொலிசாருக்கு உதவியாக அல்லது அவர்கள் சமாளிக்க முடியாத சந்தர்ப்பங்களில், இராணுவம், கடற்படையினர் சேவைக்கு அழைக்கப்படுகின்றனர். இந்த நிலைமை அடிக்கடி ஏற்படக்கூடியதுமல்ல. மழைபெருவெள்ளம், சூறாவளி ஆகிய இயற்கையின் சீற்றத்தினால் நாட்டில் சீர்குலைவு ஏற்பட்டசமயங்களில் இராணுவம், கடற்படை, விமானப்படையைச் சேர்ந்தவர்கள் சிறந்தமுறையில் பொது மக்களுக்கு உதவி புரிந்து நாட்டுக்கு நற்பணியாற்றியிருக்கின்றனர் என்பதும் உண்மையே.

ஆயினும் இலங்கையிலுள்ள இராணுவ, கடற்படை, விமானப்படையினருக்கு இதர பல நாடுகளில் போன்று பெரும் பொறுப்பும் அதிகவேலையும் இல்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய விஷயம். இதனால் தான் நாட்டின் பல பகுதிகளிலும் 'இராணுவத் தாக்குதல்' பற்றியசெய்திகள் பல தடவைகளிலும் வெளிவந்திருக்கின்றன.

சமாதான காலத்தில் நாட்டின் அபிவிருத்தியிலும் யுத்தகாலத்தில் நாட்டின் பாதுகாப்பிலும் ஈடுபட்டுப் பணியாற்றவேண்டியதே முறையான இராணுவத்தின் நோக்கமாகவும் குறிக்கோளாகவும் இருக்கவேண்டும். இலங்கை இராணுவ, கடற்படைகளைப்பொறுத்தவரையில் உணவு உற்பத்தி, மற்றும் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களிலும் எப்பொழுதோ ஈடுபடுத்தப்பட்டிருக்கலாம். நமது இராணுவத்தினர் உணவு உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டால் நல்லபயன் கிடைக்குமென்பதை இதேபத்திரிகையில் நாம் இதற்கு முன்னர் பல தடவைகளிலும் எடுத்துக்கூறியிருந்தோம். இப்பொழுது இது செயல்படப்போவது கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். இதேசமயம் கடற்கரையோரங்களில் முகாமிட்டுள்ள கடற்படையினரையும், இராணுவத்தினரையும் கடற்றொழிலில் ஈடுபட

ஒரு திட்டம் வகுத்தாலும் அது வீண் முயற்சியாகமாட்டாது.

## ஷேக் அப்துல்லா

சிறையிலிருந்து விடுதலை அடைந்துள்ள காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லா நேற்றுப் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்கு மிடையில் உள்ள வேறுபாட்டை நீக்கவும் நட்புறவையும் மத ஒற்றுமையையும் ஏற்படுத்தவும் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்திருக்கிறார். அவரது முயற்சி வெற்றி பெற்று இந்திய துணைக்கண்டத்தில் அமைதியும் ஒத்துழைப்பும் ஏற்படவேண்டுமென்பதே உலக சமாதானத்தை விரும்பும் மக்களின் வேணவா.

ஷேக் அப்துல்லா முன்னர் சில தவறுகள் செய்திருந்தாலும், இந்தியஅரசாங்கமும் அவர் விஷயத்தில் பல தவறுகள் இழைத்திருந்தாலும் பழையனவற்றை இரு தரப்பினரும் மறந்து நல்ல முறையில் புதிய முயற்சிகளைமேற்கொள்ள வேண்டும்.

இந்தியாவும் பாகிஸ்தானும் என்றுமே பகைவர்களாக இருக்கக்கூடாது; இருக்க முடியாது. காஷ்மீர் பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வுக்கு வழி காணப்பட்டால் இரு நாடுகளுக்குமிடையில வேறு பிரச்னைகள் இருக்க நியாயமில்லை. காஷ்மீர் பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வு காணவும் இந்திய-பாகிஸ்தான் நட்புறவை வலுப்படுத்தி இரு நாடுகளும் பொருளாதாரத் துறையில் முன்னேறவும் ஷேக் அப்துல்லாவை இந்திய அரசாங்கம் நல்ல முறையில்பயன்படுத்த வேண்டும். இந்தியத்தலைவர்களின் ராஜதந்திரத்துக்கு இதைவிடச் சிறந்த சந்தர்ப்பம் இருக்க முடியாது. எல்லைகளில் என்றுமே பகைவர்களை வைத்துக் கொண்டு இந்[தியா] முன்னேற முடியு[ம்]மென்பது சுலபமான காரியமல்ல.

ஆசிரியருக்கு கடிதங்கள்

## கொழும்புக் கோட்டையில் ஓர் இந்துக்கலாச்சார நிலையம்

இலங்கையில் பின்பற்றப்பட்டுவரும் மதங்களின் வாலிபர் சங்கங்கள் அத்தனைக்கும் கொழும்புக் கோட்டையிலே மதத்தின் பெயரால் புத்த வாலிபர் மண்டபம், கிறீஸ்தவ வாலிபர் மண்டபம், இஸ்லாமிய வாலிபர் மண்டபம் என மண்டபங்கள் அமைந்திருக்கும் போது, இலங்கையில் உள்ள மதத்தவர்களுள் இரண்டாவது பெரும்பான்மை மதத்தவராகவுள்ள இந்து சமயத்தவர்களுக்கு மாத்திரம், கேந்திர ஸ்தானமாகியஅம் மாநகரப் பகுதியில் தமது வழிபாட்டைச் செலுத்த அல்லது ஆசாரசீலத்தை அனுட்டிக்க ஓர் இடத்தை இதுகால வரை இந்து மதத்தவர்களாகிய நாம் அமைக்காது வாழாவிருப்பதையிட்டு வெட்கப்படவேண்டியுள்ளது.

கொழும்பு மாநகரிலே—அதுவும் இக்கேந்திர ஸ்தானமாக அமைந்திருக்கும் கோட்டையிலே ஏகப்பட்ட காரியாலயங்களில், எண்ணற்ற இந்துக்கள் கடமையாற்றுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பிற சமயத்தைச் சேர்ந்த அத்தனை மக்களும் தமது சமயத்தையிட்டு உரிமை கோரிப் பெருமை பேசுவதற்கேற்ப, பெரிய மண்டபங்களை அமைத்திருக்கிறார்கள். இங்கு அவர்கள் தமது சமயத்தை வளர்ப்பதற்கேற்ற வழிவகைகள் செய்கிறார்கள் காலத்திற்குக் காலம் பிரசங்கங்களும கூட்டுப்பிரார்த்தனைகளும் நடத்துகிறார்கள். ஆனால் இந்துக்களாகிய நாமோ ஒரு பூசையையோ கூட்டுப் பிரார்த்தனையையோ நடத்துவதற்குத்தகுந்த ஒரு மண்டபத்தை இங்கு அமைக்காது இருப்பது கவலைக்குரிய விஷயமாகும்.

அதுமடுமட்டல்லாதுமற்றும் சமயஸ்தாபனங்கள்தற்போதமைத்து வைத்திருக்கும் ஸ்தாபனங்கள் மூலம் காலத்துக்குக் காலம் பிரசங்கங்களும் பூசைகளும் நடாத்தி வருவதால் அவர்கள் மத்தியில் ஒரு சமய எழுச்சியையும் விழிப்புணர்ச்சியையும் தூண்டும் ஸ்தாபனங்களாக இவை இயங்கி வருகின்றன. அத்துடன் இவை தமது சமயத்தவர்கட்கு உரிமையுடன் தங்கும் வசதிகளும் போசன வசதிகளும் செய்து கொடுக்கும் அளவிற்கு அமைந்துள்ளன.

ஆனால் எமது இந்துக்கள் தமது ஆசாரசீலர்களை இந்து ஆசாரப்படி ஒழுகி நடப்பதற்கு அதைப் பற்றி மற்றவர்கள் அறிவதற்கேற்ப அறிவுரைகள்வளங்குவதற்கு இங்கு ஒரு ஸ்தாபனம் அமையாதிருப்பது எமது சமய மறுமலர்ச்சிக்கே ஒரு தடையெனக்கூறினால் மிகையல்ல. இவற்றால் எமது இந்துக்கள் உரிமையுடன் பெருமையாகத் தமதுசமய வணக்கத்தையோ அல்லது ஆசாரத்தையோ அனுட்டிக்க முடியாது அல்லற் படுகிறார்கள் என்பதை நாம் உற்று உணர்ந்துபார்க்கவேண்டும்.

மேலும்பழுத்த பண்புள்ள இந்துக்கள் பலர் சரியான முறையில் தமது அனுட்டானங்களைச் செய்வதற்குத் தகுந்த ஒரு ஸ்தாபனம் இல்லாததால் தமது இந்து சமய நெறிமுறை அனுட்டானங்களில் நின்றும் நிலை தவறி வாழவேண்டியவர்களாக இருக்கிறார்கள். மற்றும் சமயத்தவர்களைப் போல இந்துக்களாகிய எமக்கும் கேந்திர ஸ்தானமாகிய கோட்டையிலே ஒரு ஸ்தாபனம் இருக்குமாயின் இலங்கையின் எத்திக்கில் இருந்தும் கொழும்பு வரும் ஒவ்வொரு இந்துவும் ஆசாரத்தை அனுட்டித்து செலக்கூடியதாக இருக்கும் என்பதைச் சைவப்பெருமக்களாகிய நாம் சிந்தித்துச் செயலில் இறங்கவேண்டும்.

இதற்கு ஆகவேண்டிய இடமும் பௌத்த வாலிபர் சங்கக் கட்டிடத்திற்கும், தொலைபேசி இணைப்பு அலுவலகத்திற்கும் இடையில அமைந்திருக்கிறது. இப்பொழுது அவ்விடத்தில் அரசாங்க தபால் பொதியறைக் காரியாலயம் அமைந்திருக்கிறது. இக்காரியாலயம் மிக விரைவில் கொழும்புக் கோட்டை புகையிரத ஸ்தானத்திற்கு அருகில் அமைக்கப்படும் கட்டடத்திற்கு மாற்றப்பட இருப்பதால் ஏற்படவிருக்கும் வெறுமையான இடத்தை இந்துக்களாகிய நாம் அரசாங்கத்திடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொள்வது நியாயமான ஒரு செயலாகும். எனவே பிற ஸ்தாபனங்கள் அவ்விடத்தை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சி எடுப்பதற்கு முன்பதாக நமது இந்து சமய சங்கங்களோ, சபைகளோ இன்னமும் காலந்தாழ்த்தாது தங்களுக்குள் தாங்களே சண்டையிட்டுக்கொள்ளாது கொழும்பிலுள்ள இந்து சமய சம்பந்தப்பட்ட அத்தனை சங்கங்களும், சபைகளும் பங்குகொள்ளும்வகையில் ஓர்அழைப்பை விடுத்து ஒரு குழுவை அமைத்து ஆக வேண்டிய நடவடிக்கைகளை ஒரே குரலில் எழுப்பவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்

க. சி இராஜேஸ்வரன்
கொழும்பு.

## உரும்பராய் பட்டினசபையும் சோலைவரி அறவிடுதலும்

27-12-67-ல் வெளியான 'ஈழநாடு' இதழில், உரும்பராய் பட்டினசபை, சோலைவரி அறவிடுதல், சட்டத்துக்கு அமையவில்லையென உரும்பராய் வாலிப முன்னணிச் செயலாளர் திரு. அரியரத்தினம், பட்டினசபைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில், கருத்துத் தெரிவித்துள்ளார்.

பட்டினசபை, சட்டத்துக்கமையவே தனது காரியங்களைச் செய்துவருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பட்டினசபைச் சட்டம் (அத்தியாயம் 256) 169ம், 240-ம் விதிகளுக்கிணங்கவே பட்டினசபை சோலைவரியை அறவிடுகிறது.

பழைய நீர்வேலிக் கிராம சபைக்கு வருமதியாகவுள்ள நிலுவைகளைப் பதிவழிக்காது, சோலைவரியைப் பட்டினசபை தொடர்ந்து அறவிட முடியுமென்பதை இவ் விதிகள் விளக்கும்.

மு. கனகசுந்தரம்
(1-ம் வட்டார அங்கத்தவர்)
உரும்பராய், தெற்கு.
உரும்பராய்.

## இன்றைய பலன்

[5-1-68]
வெள்ளிக்கிழமை
மார்கழி மீ 21 உ

நட்சத்திரம்- பூரட்டாதி.

திதி- பஞ்சமி. காலை 7-07 மேல் ஷஷ்டி.

சுபநேரம்- 6-31—8-01

ராகுகாலம்- 11-01—12-31.

மேஷம்- வெள்ளிப்பணம் துள்ளும், வேண்டியது கிடைக்கும்.

ரிஷபம்- அன்னியர் பகை, ஆபத்துமுண்டு.

மிதுனம்- கல்வி நலன், அறிஞர்கள் ஆதரவு.

கடகம்- அறவழி நாட்டம், தாராள மனம்.

சிம்மம்- திடீர் தாக்குதல், திகைக்க வைக்கும் சம்பவம்.

கன்னி- காதல் செய், கவலை பறக்கும்.

துலாம்- தானிய விரயம், கால்நடைக் கஷ்டம்.

விருச்சிகம்- தந்தை தாய் பேண், தனமும் கிடைக்கும்.

தனுசு- ஆக்கவிருத்தி, அக மகிழ்ச்சி.

மகரம்- தேடியது கிடைக்கும், தெய்வபலம்

கும்பம்- காதலில் மோதல், கவலையின் தாக்குதல்.

மீனம்- குமுறும் நெஞ்சம், குறை கேட்க நேரிடும்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## உப தபால் நிலையத்தில் தொலைபேசி

ஊர்காவற்றுறை, வியா.

வேலணை மேற்கு கிராம சேவையாளர் பகுதியில் அமைந்துள்ள சுருவில் உப தபால் நிலையத்தில் தந்தி - தொலைபேசித் தொடர்பு வசதி அமைக்கப்பட்டுள்ளது. தபால், தந்திப் போக்குவரத்துப் பகுதி அதிகாரி திரு. கே. நாகலிங்கம் தந்தி - தொலைபேசிச்சேவை ஆரம்பித்துவைத்தார். ஊர்காவற்றுறை தபால் நிலைய அதிபருடன் அவர் முதன் முதன்முதலாகப் பேசினார்.

இவ்வைபவத்தை யொட்டி தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் தலைமையில் நடந்த கூட்டத்தில் தந்திப்பகுதி என்ஜினியர் திரு. யேசுதாசன் உட்பட வேறு சிலரும் உரை நிகழ்த்தினர்.

## “பொது[...] முறை[...] குற்றச் [...] மக்களின் [...]

### வடபகுதி [...] மகாநாட்[...]

— நமது [...]

யாழ்ப்பாணம், வெள்ளி

''பொதுமக்களுக்கு மனக்கசப்பையும் அவர்களின் விரோதத்தையும் உருவாக்கக்கூடிய செயல்களைப் பொலிசார் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. அதே நேரத்தில் அவர்களின் ஒத்துழைப்பின் மூலமே பொலிசார் சட்டவிரோதமான தேசத்துரோகிகளைக் கைது செய்யவேண்டும். பொது மக்களின் பாதுகாப்புக்காக பொலிசாரே தவிர பொலிசாருக்காக பொதுமக்கள் அல்ல.''

நேற்று வடமாகாணப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் வடமாகாணத்தைச் சேர்ந்த 19 பொலிஸ்நிலைய அதிகாரிகளும், 4 உதவிப்பொலிஸ் சுப்பிரின்டென்களும் கலந்து கொண்ட பொலிஸ் மகாநாட்டில் மேற்கண்டவாறு முடிவுசெய்யப்பட்டது. இம் மகாநாட்டில் யாழ்ப்பாண உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. தவராசா, காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. டபிள்யூ. லியனகே, மன்னார் உதவிப்பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. சேனரத், திரு. என். வீரசிங்கம் ஆகியோரும் மற்றும்முக்கியபொலிஸ் உத்தியோகத்தர்களான திரு. மாணிக்கம், திரு. மூர்த்தி, திரு. கனகசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். இம்மகாநாட்டில் செய்யப்பட்ட மற்றும் முடிவுகள் வருமாறு:-

நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் பாதுகாப்பதேபொலிசாரின் முக்கிய கடமையாகும். தேசத்துரோகமான குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலும், கறுப்புச் சந்தைக்காரர்களிடமிருந்து ஏழைகளைக் காப்பாற்றுவதிலும் தேசத்துரோகிகளால் தூண்டிவிடப்படும் குழப்பங்களைக் கட்டுப்படுத்துவதிலும் பொலிசார்எந்த நேரத்திலும் துணிச்சலுடன் போராடத்தயாராக இருக்க வேண்டும். நாட்டுக்காகத் தம்மைத் தியாகம்செய்து கொள்ள எந்த நேரமும் தம்மை உஷார்ப்படுத்திக்

## “உடன[...] நிவாரணம்[...]

சமூகசேவை [...]
நல்லூர் எம். பி[...]

கொழும்பு, வியாழன்

''வடபகுதி மக்கள் வெள்ளப் பெருக்கால் தமது வீடுகளையும் உடமைகளையும் இழந்து ஒரு மாத காலமாகின்றபோதிலும் அவர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்குவதில் இன்னும் ஏன் தாமதம்.''

இவ்வாறு சமூக சேவை அமைச்சர் திரு. அசோகா கருணாரத்னவை நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கேட்டுள்ளார்.

இப்பகுதி மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...துமக்களின் விரோதத்தை தேடும் ...றையில் நடந்து கொள்ளக் கூடாது

## ...செயல்களைத் தடுக்க ...ஒத்துழைப்புத் தேவை"

### ...ந்தி பொலிஸ் அதிகாரிகள் ...நாட்டில் செய்யப்பட்ட முடிவு

நமது நிருபர் எம். எஸ். துரைராசா —

வள்ளி
மனகி
ளின்
நவாக்
ளை ப்
ந்தர்ப்
த் தி க்
அதே
ன் ஒத்
பொலி
நமான
கைது
பொது
புக்காக
பொலி
மக்கள்

காணப்
ரு. ஆர்.
மையில்
சேர்ந்த
அதிகா
பாலிஸ்
கலந்து
மகா
டவாறு
து. இம்
ப்பாண
ப்பிரிண்
, ஊாங்
விப்பொ
ன் திரு.
மன்னுர்
ப்பிரிண்
, திரு.
ஆகியோ
பொலிஸ்
ளா ன
திரு
சசிங்கம்
துகொண்
நாட்டில்
றும் முடி

தியையும்
பாதுகா
ன் முக்கிய
சத்துரோ
ரக் கண்டு
ப்புச் சந்
ரு ந் து
ாற்றுவதி
ாகிகளால்
குழப்பங்
டுத்துவதி
ந்த நேரத்
லு ட ன்
இருக்க
டுக்காகத்
கம்செய்து
நேரமும்
ப்படுத்திக்

கொள்ளவேண்டும்.

சென்ற வருடத்திலும் பார்க்க இந்த வருடம் குற்றங்களைப் பெருமளவில் குறைக்கவும், பயங்கரமான தேசத்துரோகிகளிடமிருந்து பொதுமக்களைக் காப்பாற்றவும் வடமாகாணத்தில் அந்தந்தப் பொலிஸ்நிலையத்தவர்கள் இம்மகாநாட்டின் மூலம் திடசங்கற்பம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

நாட்டின்பயங்கரக்குற்றங்களான சூதாட்டம், சட்ட விரோதக் குடியேற்றங்கள், கொலைகள், கடத்தல், கற்பழிப்புக்கள், சட்டவிரோதமானகுடிவகைகள் தயாரித்தல், சாதிக்கலவரங்கள் ஆகியவை இலங்கையின் ஏனைய பகுதிகளைவிட வடபகுதியில் குறைவாகக் காணப்பட்ட போதிலும் இந்த வருடத்தில் அவை முற்றாக ஒழிக்கப்படவேண்டும்.

வடபகுதியில் சென்றவருடம் சிலர் சில இடங்களில் சிறுசிறு சாதிக் கலவரங்களை தூண்டிவிட்டு வடபகுதியில் ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். எனினும் அவை மேலும் வளராமல் பொலிசார் ஆரம்பத்திலேயே அவற்றைக்கட்டுப்படுத்தியது வரவேற்கத்தக்கதாகும் இப்படியானசாதிக் கலவரங்கள் இந்த வருடம் தலைதூக்காவண்ணம் சகல பொலிஸ் நிலைய அதிகாரிகளும் மிகவும் கவனமாக இருக்கவேண்டுமென வட மாகாணப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் இம்மகாநாட்டில் கேட்டுக்கொண்டார்.

எந்தவிதமானவிசாரணைகளிலும் பொதுமக்களின் முறையீடுகளிலும் பொலிசார் எந்தவிதத்திலும் பாரபட்சம் காட்டக்கூடாது. ஏழை பணக்காரன். உயர்ந்தவன் தாழ்ந்தவன், உயர்ந்தசாதி தாழ்ந்த சாதி என்ற பேதம் காட்டாது நீதியுடனும்நேர்மையுடனும் அரசாங்கத்துக்கு விசுவாசமாகவும் நடந்துகொள்ளவேண்டும் என பொலிஸ் அதிகாரிகளை பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டார்.

## திருவிழா

ஊர்காவற்றுறை, வியா.

கடந்த சில ஆண்டுகளில் அலங்கார உற்சவம் நடைபெற்ற புங்குடுதீவு - மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் இவ்வாண்டு கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பித்து தேர்த்திருவிழா நடாத்த ஆலய நிர்வாகஸ்தர்கள் தீர்மானித்துள்ளனர். இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை ஆலயப் பிரதம நிர்வாகஸ்தர் திரு. வி. அருணாசலமும் பரிபாலன சபையாரும் மேற்கொண்டுள்ளனர். எதிர் வரும் பங்குனிமாத பிற்பகுதியில் உற்சவம் ஆரம்பிக்கப்படுமெனவும் அறியப்படுகிறது.

## சிவராத்திரி விழா

முல்லைத்தீவு, வியாளன்

எதிர்வரும் மகா சிவராத்திரி விழாவை முல்லைத்தீவு வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் சிறப்பாக நடத்துவதென முல்லைத்தீவு வளர்பிறை விளையாட்டுக் கழகத்தினரின் விசேஷ கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது.

## பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகரசபை விஷேச ஆணையாளர்களான திருவாளர்கள் நடேசன், எஸ்.வி மாணிக்கவாசகர் ஆகிய இருவரும் மாற்றலாகிச் செல்வதையொட்டி யாழ். மாநகரசபை ஊழியர்கள் பிரியாவிடைக் கூட்டமொன்றை ஒழுங்கு செய்துள்ளனர்.

இன்றுமாலை யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர் பொழுது போக்கு சங்கமண்டபத்தில்இக் கூட்டம் நடைபெறவுள்ளது. (நி)

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், வெள்ளி

குரும்பசிட்டி சன்மார்க்க சபைப் பொதுக் காரியதரிசியும், வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்க உபகாரியதரிசியும், குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலை ஆசிரியருமான திரு. தம்பி. இராசரத்தினம் இவ்வருடம் தலைமையாசிரியர் பதவி பெற்று வெளியூருக்கு மாற்றலாகிச்செல்வதை முன்னிட்டு குரும்பசிட்டியில் உபசரணைக் கூட்டம்ஒன்றுநடைபெற்றது.

கடந்த பல்லாண்டுகளாக தமிழாசிரிய சங்கங்களில் முக்கிய பங்கு கொண்டுழைத்த இவரது சேவையைப் பலரும் பாராட்டிப் பேசினர். (நி.)

## இவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்

சுழிபுரம், வியாழன்

வடபகுதியில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க யாழ் மாவட்ட புற்றுநோயாளர் சங்கத்தினர் முன் வந்துள்ளனர். இந் நோயாளருக்கு மாதாந்தம் ரூபா 20 நிவாரணமாக வழங்கப்படு மெனத் தெரிகிறது.

## ஜனாதிபதியுடன் அண்ணா மதுரைக்கு பயணம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று தமிழாராய்ச்சி மகாநாட்டை ஆரம்பித்து வைத்த இந்தியக் குடியரசு ஜனாதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசையின் இன்று காலை மதுரைக்குச் சென்றார். ஜனாதிபதியுடன் தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை, கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், பாதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி ஆகியோரும் சென்றனர்.

டாக்டர் ஸாகிர் ஹுசையின் இந்திய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் மதுரைக்குச் சென்றிருப்பது இது தான் முதல் தடவை, மதுரைப்பல்கலைக்கழகக் கட்டிடத்துக்கு டாக்டர் ஸாகீர்ஹுசையின் அடிக்கல் நாட்டிவைத்துப் பேசுகையில், அரசியல்வாதிகள், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகக் கல்வித்துறையில் அதிருப்தியை ஏற்படுத்தக்கூடாது என்றார். இப்போதைய நிலைமையை மட்டும் கருத்தில்கொண்டு கல்வித்துறையை நோக்கக்கூடாதென்றும், உயர் கல்வி சீராக, பயனுள்ளவகையில் நெடுநோக்கத்துடன் கருத்தில்கொண்டு செயல்படுத்த வேண்டுமென்றும் அவ்வாறு செய்ய அரசியல்வாதிகள் விரும்பாவிடின்அமைதியான முறையில் உயர் கல்வி கிடைப்பதற்கு இடையூறு செய்யாமலாவது இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

### தமிழில் பேசினார்

தமிழ்நாட்டு மக்கள் தம் மீது காட்டும் அன்புக்கு நன்றி செலுத்தும்முகமாக முதலில் சில வார்த்தைகளை ஜனாதிபதிதமிழில் பேசினார்.

## வடிகால்வாய் பிரச்னை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் அமைந்துள்ள ஐஸ் பிளான்ட் வீதியிலுள்ள வடிகாலில் வெள்ளத்தாலேற்பட்ட உடைப்பினால் அழுக்கு நீர் தேங்கியுள்ளது.

தேங்கிய இந்த அழுக்கு நீரைச் சுத்திகரிக்கும்படி குறிப்பிட்டவீதியிலுள்ளவர்கள் யாழ்ப்பாண முனிசிபல் கமிஷனுக்கு பலமுறை முறையீடுசெய்தும் இது வரை சுத்திகரிக்கப்படாமலேயுள்ளதாம்.

இவ்வட்டாரத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் இது சம்பந்தமாக மேலும் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர்களை நேற்றுச் சந்தித்துப்பேசியுள்ளார்.

## கல்லூரியில் நடராசர் சிலை

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடராஜர் விக்கிரகம் மிக விரைவில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கின்றது. ஆறுயிரம் ரூபா செலவில் இதற்கான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. கல்லூரியின் பிரதான மண்டபத்துடன் இம்மண்டபம் இணைக்கப்பட்டுள்ளது.

## கார்—சயிக்கிள் விபத்து

### இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியிலுள்ள சிவலிங்கப்புளியடியில் நேற்று முன் தினம் நடைபெற்ற கார் விபத்தொன்றில் பலத்தகாயங்களுக்குள்ளான இருவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சயிக்கிளும் காரும் மோதியதில் சயிக்கிள் ஓட்டி வந்த எஸ். மகாலிங்கம் என்பவரும் கார் முன்சீட்டில் சவாரிசெய்த எஸ். நடராசா என்பவருமே பலத்தகாயத்துக் குள்ளானவர்களாகும்.

சயிக்கிள் ஓட்டிவந்த மகாலிங்கம் தலையில் பலமான காயம் ஏற்பட்டது. கார் சாரதியான திரு. கே. முத்துக்குமாரு என்பவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும்தெரிகிறது. (வி, நி)

## விதியை மதியால் வெல்ல முடியுமா?

ஹீம் பண்டா தமது சேனைத் தோட்டத்தில் ஒரு பூசினிக்காயைப் பிடுங்கிக் கொண்டு வீடு திரும்பிய போது காட்டானை ஒன்று அவரைப் பின்னால் வந்து தாக்கியது. அவர் பூசினிக்காயைக் கீழே போட்டு விட்டு ஓட்டம்பிடித்தார். யானை அவரை விட்டுவிட்டு பூசினிக்காயைத் தாக்கியது. ஆனால் ஹீம் பண்டா பயத்தாலும், அதிர்ச்சியாலும் ஆஸ்பத்திரியில் மரணமாகி விட்டார்.

ஃ ஃ ஃ

பெரேரா தமது டாக்ஸியை ஓட்டிச்சென்றபோது நாய் ஒன்று குறுக்கே ஓடியது. அதைக் காப்பாற்ற நினைத்து பெரேரா டாக்ஸியை வெட்டினார். அது எதிரே வந்த லொறியுடன் மோதியது. நாய் தப்பியது ஆனால் டாக்ஸிக்குள் இருந்த பெரேராவின் 15 மாதக் குழந்தை மரணமடைந்தது.

ஃ ஃ ஃ

தெருவில் நின்ற பையன் ஒருவனை லொறி தட்டிவிட்டு ஓடியதைப் பார்த்த அபயரத்தின லொறியைக் கை காட்டி நிற்பாட்ட முயன்றார். அது நிற்கவில்லை. உடனே ஓடிக்கொண்டிருந்த லொறிக்குள் அபயரத்தின தாவிப் பாய்ந்தார். பிடி தவறி லொறி அவரைச் சிறிது தூரம் இழுத்துச் சென்றபோது அவர் படுகாயமுற்று மரணமானார். லொறி அடித்த பயன் ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்பட்டான்.

ஃ ஃ ஃ

சென்ற சில தினங்களுக்குள் நடந்த நிகழ்ச்சிகள் மேலே உள்ளவை. இவற்றில் விதியின் விளையாட்டைப் பார்த்தீர்களா?

என்னவோ காரணத்துக்காக, எங்கேயோ, எப்படியோ நடந்துகொண்டவர்கள் [illegible] வேண்டியவர்கள் தப்பிவிடுகிறார்கள். இது எப்படி நடக்கிறது? மனிதன் தன் மதியூகத்தால் மரணத்தைத் தவிர்க்கமுடியுமா? விதியை மதியால் வெல்லலாமா?

கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் கடவுளால் விதிக்கப்பட்டது விதி, அச்சட்டத்தை மனிதரால் மாற்ற முடியாதென்று திண்ணமாகக் கூறுவார்கள். கடவுளுமில்லை, விதியுமில்லை, எல்லாம் மனிதன் விதித்துக் கொண்டதுதான்விதி என்று கூறுவோரும் இருக்கிறார்கள். இவர்களில் யாருடைய கொள்கை சரி, யாருடைய கொள்கை பிழை என்பது இலகுவில் தீர்மானிக்கமுடியாத விஷயம்.

ஃ ஃ ஃ

தென்னாபிரிக்க சத்திர சிகிச்சை வைத்தியர்கள் ஒரு மாதத்துக்கு முன்பு ஒரு மனித தேகத்தின் இரத்தாசயத்தை இன்னொரு மனிததேகத்துக்குள் புகுத்தி சாகவிருந்த இந்த இரண்டாவது மனித சடலத்தை 18 நாட்கள் உயிரோடு வைத்திருந்தார்கள்.

இப்பொழுது இத்துறையில் அதே வைத்தியக் கோஷ்டி இன்னொரு சோதனையை நடாத்திவருகிறது. மூளை நரம்பு வெடித்ததால் திடீரென்று மரணமான ஒரு கறுத்தவரின் இரத்தாசயத்தை வெட்டி எடுத்து, இரத்தாசயம் பழுதான ஒரு வெள்ளையருக்குப் பொருத்தியிருக்கிறார்கள். முந்திய சோதனையைவிட இந்த இரண்டாவது மிகவும் திருப்தி அளித்திருப்பதாக இந்நுட்பமான வேலையை நடத்திவரும் பேராசிரியர் கிறிஸ் பார்னட் என்பவர் கூறுகிறார்.

கறுப்புத்தோல் படைத்தவர்களை பஸ்ஸிலும் ரயிலிலும் ஏறவிடாமல், ஹோட்டலிலும், கிளப்பிலும் சாப்பிட விடாமல் ஒதுக்கிவந்த வெள்ளையர்களில் மிகவும் பிரபலமான தென்னாபிரிக்க வெள்ளையர்கள் இப்படி ஒரு கறுத்த இரத்தாசயம் ஒரு வெள்ளையர் உடம்பில் பொருத்தப்பட்டது பற்றி மூச்சும் காட்டவில்லை. கறுப்போ சிகப்போ அந்தவெள்ளையரின் உயிர் தப்பியது பற்றி அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டதால் பேசாமல் இருக்கிறார்களோ அல்லது முற்காலத்து கறுப்பு வெள்ளை துவேஷங்களை மறந்து மனம் மாறிவிட்டார்களோ தெரியவில்லை.

இதுபோக விஞ்ஞான வைத்தியம் முன்னேறிக் கொண்டு போகும் போக்கில் மனிதன் தனது மூளையால் விதியையும் வெல்லக் கூடிய காலம் வருமோ, யமனைத் தோற்கடிக்க முடியுமா என்ற கேள்விகள் இந்த இரத்தாசய பரிவர்த்தனையை நோக்கும்போது பலர் மனதிலும் எழுவது சகஜமே!

ஆனால் முதலில் கூறப்பட்டிருக்கும் மூன்று சம்பவங்களையும் பார்க்கும்போது எதிர்பாராத விபத்துக்களினால் ஏற்படும் மரணத்தை எப்படி தவிர்க்கலாம் அது மனிதனுக்குமேற்பட்ட சக்தியினால் உண்டானால் அந்த சக்திவிதிக்கும் விதியைமீறலாமா என்ற சந்தேகங்களும் அதே சமயத்தில் முளைத்தெழுகின்றன.

## நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

## ...டனடியாக ...ணம் வழங்குக"

### ...சேவை அமைச்சரை ...எம். பி. கேட்டுள்ளார்

, வியாழன்
க்கள் வென்
தமது வீடு
மைகளையும்
த கால
லும் அவர்
நிவாரணம்
ன்னும் ஏன்

மூக சேவை
. அசோகா
நல்லூர்
ர் ஈ. எம்.
கேட்டுள்
க் க ளு க் கு

வெள்ள நிவாரண நிதியாக ரூபா 5 லட்சம் வழங்குவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் இப்போது 3 லட்சம் மாத்திரம் வழங்க விருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பது பற்றி திரு. நாகநாதன் பிரஸ்தாபித்ததாகத் தெரிகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாமதிக்காது உடனடியாக நிவாரண நிதிகளை வழங்குமாறு டாக்டர் நாகநாதன் திரு. அசோகா கருணாரத்னவைக் கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுஞ்செழியன்...

[3-ம் பக்கத் தொடர்ச்] செய்யப்பட்டுள்ள இம்மகாநாட்டில், அழகுமிக்க தமிழ் மொழிக்கு மேலும் மெருகூட்டக்கூடியிருக்கும் தமிழ் மொழி ஆராய்ச்சியாளர்களை வரவேற்பதில் தாம் பூரிப்பும், பெருமையும் அடைவதாகக் கல்வி மந்திரி கூறினர்.

தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்பும், தமிழ் மக்களின் பண்பாடு, புதைந்துள்ள அரும் பெரும் செல்வங்கள், இவற்றை எல்லாம் உலகுக்கு அறிவிக்க மாநாடு முயற்சி எடுக்குமெத் தாம் நம்புவதாகத் திரு. நெடுஞ்செழியன் கூறினர்.

# தமிழ்மொழிக் கென தனிக்கழகம்

தமிழக சமூகநல மந்திரி திருமதி சத்தியவாணிமுத்து பேசுகையில், தமிழ்மொழிக்கென நிரந்தரமான ஒருதனிக்கழகம் நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, அந்த நோக்கத்தை மாநாடு நிறைவேற்றவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அவர் தமது பேச்சில்மேலும் கூறியதாவது: தமிழ் மொழியின் தொன்மை இதுவெனக் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த நாட்டின் ஆதி மொழி தமிழே. வீரம் அன்பு, அழகு நிறைந்த மொழி அது.

தமிழ்மொழி இருந்தநிலை, இன்று அது இருக்கும் நிலை இரண்டையும் ஒப்பிட்டு ஆவன செய்ய மாநாட்டு ஆராய்ச்சியாளர் முயற்சியெடுப்பார்கள் என நம்புகிறேன்.

மொஹஞ்சதாரோ நாகரிகத்தின் மொழி தமிழே என்று வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஆகவே, 6,000 வருடங்களுக்கு முற்பட்ட மொழியாகிறது தமிழ் மொழி.

சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர் எமது ஆன்ருேர். இன்ருே தமிழுக்கென ஒரு சங்கமோ, கழகமோ இல்லை. அத்தகையதொரு கழகத்தை நிரந்தரமாக நிறுவ வேண்டியது எமது கடமை.

# காமராஜ் வரவேற்பு

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ், வரவேற்புரை நிகழ்த்தினர். அவர் சுருக்கமாகப் பேசியதாவது: 'இப்போது கூடியுள்ள மகாநாடு இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடாகும். உண்மையிலேயே முதலாவது மநாடாகவே இது இருந்திருக்க வேண்டும். வெளிநாட்டில் வாழும் தமிழர், நம்மையும் மிஞ்சிவிட்டார்கள். என்ருலும் இன்று ஆரம்பமாகும் இரண்டாவது மாநாடு நடைபெறுவதில் சென்னை அரசாங்கம் ஊக்கம் காட்டிப் பெருமுயற்சி எடுத்துள்ளது. தமிழ் மொழியின் மேன்மைக்கு இம்மாநாடு துணைபுரியும என நம்புகிறேன்.'

பின்னர் மாநாட்டு மலர்க் குழுவின் தலைவர் திரைப் படநடிகர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பேசினர். அவர் மலரில் வெளியாகியுள்ள கட்டுரைகளின் தன்மையை மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு விளக்கினர்.

பன்மொழிப் புலவரும், பிறநாட்டுப் பேராசிரியருமான திரு. புலியோஸா, தமிழ் மொழியின் தனிச் சிறப்புகள்பற்றி உரையாற்றினர்.

பின்னர் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் திரு. ஏ. சுப்பையா மாநாட்டுக்கு வந்துள்ள வாழ்த்துரைகளை வாசித்தார். இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி, உபராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி, திரு. இராஜகோபாலாச்சாரியார், முன்னுள் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், ரஷ்ய தூதுவர், மலேஷிய பொதுப்பணி மந்திரி சிங்கப்பூர் பிரதமர், வெளியுறவு மந்திரி மற்றும் பலர் யாநாட்டை வாழ்த்தி அனுப்பிய செய்திகளைத் திரு. சுப்பையா வாசித்தார்.

அடுத்து சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சிக்கான நிதி வழங்கும் வைபவம் நடைபெற்றது.

முதலில் சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு நிதி வழங்கிய தமிழக பொதுப் பணி மந்திரி திரு. மு. கருணாநிதி, தமிழகத்தில் புத்துணர்வும், புதிய எழுச்சியும் தோன்றியுள்ளதாகக் கூறினர்.

# எழுச்சி வெறும் காட்சியாக மாருதிருக்க குறள் ஆராய்ச்சி

கட்சி சார்பற்ற முறையில் தமிழக மக்கள் சூழுமியுள்ள காட்சியையும், தமிழகத்தில் ஜனநாயகம் பூத்துக் குலுங்குவதற்கு அத்தாட்சியாக மாநாடு அமைத்துள்ள முறையையும் மந்திரி பாராட்டினர்.

தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள புதிய எழுச்சிவெறும் காட்சியாக மறைந்துவிடாமல், நிரந்தரச் செயல்களாக அமைய வேண்டுமென்ற ஆர்வத்திலேயே தமிழக அரசாங்கம் இந்தத் தமிழாராய்ச்சி மாநாட்டின் மூலமாக, சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சித்துறைக்கென, ஒவ்வொன்றுக்கும் ரூ. 3 லட்சம் நிதி அளிக்க முன்வந்திருப்பதாகத் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

பின்னர் தமிழக உணவு மந்திரி திரு. மதியழகன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கான நிதியை அளித்தார். புதிய தமிழகத்துக்குத் திருக்குறள் ஆராய்ச்சி உதவவேண்டுமென்ற நோக்கத்துடனேயே இம்மூன்று பல்கலைக் கழகங்களிலும் திருக்குறள் ஆராய்ச்சித் துறைகள் நிறுவப்படுவதாக அவர் கூறினர்.

மதுரைப் பல்கலைக் கழக நிதியை அளித்த, தமிழக உள்ளூராட்சி, விவசாய மந்திரி திரு. முத்துச்சாமி, திருக்குறளின்புகழ் உலகெங்கும் பரவ, ஆராய்ச்சித் துறையினர் வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஆராய்ச்சித் துறையில் ஈடுபடும் வல்லுனர், மற்ற நாட்டவர்களுக்கு முன்னேடிகளாக விளங்கவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினர்.

நிதிகள் பெற்ற பல்கலைக் கழகங்களின் சார்பில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ராஜா சர் முத்தையா செட்டியார். நன்றி தெரிவித்தார். தமிழகத்தில் கிடைக்கக்கூடிய பழைய ஏட்டுச் சுவடிகளைப் பெற்றுத்தருவதில் தமிழக அரசாங்கம் முன்வந்து உதவ வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். உத்தேச தமிழாராய்ச்சிக் கழகம், வெற்றி தோல்வியெனக் கணிக்கும் வெறும் பரீட்சைகளை நடத்தும் நிலையமாக இல்லாது, தமிழ்மொழி ஆய்வுக்கும், அறிவுக்கும் மையமான ஒரு நிலையமாகச் செயற்படவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்து, ஐக்கிய நாடுகள் அமைப்புக்கல்வி - அறிவியல் பண்பாட்டு நிறுவனத்தின் தலைமை நெறியாளர் திரு. மா. சேஷையா வாழ்த்துரை வழங்கினர். தமிழ்மொழி. தமிழ்ப்பண்பாடு ஆகியவற்றின் தொன்மையை அவர் விளக்கினர். அத்துடன், தமிழ்க் கலாச்சாரத்தில் இழைந்துள்ள ஆழ்ந்த மனிதத்துவத்தை வெளிநாட்டு அறிஞர்கள் பலர் ஏற்றுக்கொண்டுள்ளதையும் அவர் ஆதாரங்களுடன் தெரிவித்தார்,

இலங்கை உள்ளூராட்சி மந்திரி திரு. மு. திருச்செல்வம்பேசுகையில், தமதுநாட்டில் தமிழ்ப்பிள்ளைகளுக்குத் தமிழ் மொழியே போதனமொழியாக்கப்பட்டுள்ளதாகக் கூறினர்.

தமிழ்மொழியில், பொதுவான கலைச்சொற்களை உருவாக்க மாநாடு முயற்சிஎடுக்கவேண்டுமென்று திரு. திருச்செல்வம் கேட்டுக் கொண்டார்.

பின்னர் திருவாவடுதுறை ஆதீனம் தயாரித்தளித்த 'தமிழ்க்கடலில் முத்துக்கள்' [illegible]

# தமிழரின் பண்புக்குகவர்னர் உஜ்ஜல்சிங் பாராட்டு

அதைத்தொடர்ந்து, தமிழக கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங், மாநாட்டுச் சிறப்பு மலரைவெளியிட்டுப் பேசினர். தாம் கவர்னராகப் பதவியேற்ற ஒன்றரை வருட காலத்தில், தமிழ் மொழியின் சிறப்பையும், தமிழ்மக்களின் பண்பட்ட கலாச்சாரத்தையும் தாம் நன்கு அறியமுடிந்ததாக அவர் கூறினர். தமிழ் மக்கள் மிகவும் இனிய சுபாவமும், எளிமையும், அன்பும், விருந்தோம்பும் பண்பும் மிகுந்தவர்கள் என்ருர், கவர்னர் உஜ்ஜல்சிங். தமிழ் மொழிபற்றி அவர் குறிப்பிடுகையில், மிகவும் பழமைவாய்ந்த அம்மொழி, ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளினூடாக, தனது தனித்துவத்தையும், சிறப்பையும் இழக்காது காப்பாற்றி வந்துள்ளமை பாராட்டுக்குரியது என்று கூறினர்.

# தமிழ் உலகப் பொதுமொழி

கவர்னரின் உரையை அடுத்து, இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில், தமிழ்மொழி பிறநாடுகளில் பேசப்படும் சிறப்பைப் பெற்றுள்ளமொழி என்று கூறினர். அதனுல், தமிழ் மொழி உலகப்பொதுமொழியாகிறது என்ருர் ராஷ்டிரபதி. அரேபியா, எகிப்து, ரோமாபுரி, கிரேக்கநாடு போன்ற பல நாடுகளுடன் வணிகத்தொடர்புகொண்ட பழம் மொழி அதுவெனவும் அவர் குறிப்பிட்டார். திருக்குறளை உலகுக்கு அளித்த மொழி அது என்ருர் அவர். அம்மொழியின் சிறப்புகள் பல எனக்கூறிய ராஷ்டிரபதி, தமிழ்மொழி பற்றிய விரிவான உரையொன்றை ஆற்றினர்.

தமிழகத்துக்குத் தாம் புதியவரல்ல எனக்குறிப்பிட்ட ராஷ்டிரபதி, சென்னைக்கு முன்னர் தாம் வந்திருந்த தடவைகளை நினைவுகூர்ந்தார். சென்னை மாநகர சபை தமக்களித்த வரவேற்புரைக்கு அவர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

ராஷ்டிரபதி தமது உரையை ஆரம்பிக்க முன்னர் 'வணக்கம்' என்று தமிழில் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

ராஷ்டிரபதியின் உரையைத் தொடர்ந்து தமிழக முதல்மந்திரி திரு. அண்ணுதுரை தமது தலைமையுரையை நிகழ்த்தினர்.

முன்னர் சென்னைக்குவந்தபோது, திருவள்ளுவர் உருவப்படத்தைத் திறந்து வைத்த பெருமகனுரான ராஷ்டிரபதி இன்று தமிழாராய்ச்சி மகாநாட்டைத்திறந்து வைப்பது மிகவும் பொருத்தமானதே என்று அண்ணு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

'தமிழ்மொழி வலிமைமிக்கது. வரலாற்றுடையது; வாழ்வு பெற்றது; பிறரையும் வாழச் செய்வது. அம்மொழியின் சிறப்பை இங்கு கூடியுள்ள ஆராய்ச்சியாளர்கள், ஆதாரங்களுடன் எடுத்துக்காட்ட இருக்கிருர்கள்.

தமிழ் மொழி ஆராய்ச்சி பெருமளவில் நடைபெற வேண்டும். உலகம் அறியுமளவில் நடைபெறவேண்டும்.

தமிழ்மொழி புதிய பெருமை, புதிய வலிமை பெற இம்மாநாடு வழிவகுக்குமென நான் நம்புகிறேன்.

தமிழ்மொழியின் ஏற்றத்தில் என்னைப் போலவே இங்கு கூடியிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களும் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதில் ஐயமில்லை;

இன்றையதினம் தமிழை அரியாசனத்தில் ஏற்ற நாம் இங்கு உறுதி பூண வேண்டும்.

## "விரைவில் நிறைவேற்றுவேன்"

அனலைதீவு, வியா.

"அனலைதீவு, சைவத்தைக் காப்பாற்றும் நாடு என்பதைப் பல வருடங்கட்குமுன்னரே அறிந்திருந்தேன். இன்று அனலைதீவு கிராமமுன்னேற்றச் சங்கத்தினர் கேட்டுக்கொண்ட கோரிக்கைகளை தீவுப்பகுதி காரியாதிகாரியுடன் கலந்தாலோசித்து மிகவிரைவில் நிறைவேற்றுவேன்."

அனலைதீவு கிராமமுன்னேற்றச்சங்கத்தினர் புதிதாக அமைத்த குடியேற்றத்திட்டவீதியைப்பார்வையிடுவதற்காக உத்தியோகபூர்வமாக விஜயம் செய்த யாழ். மாவட்ட உதவி அரசாங்கஅதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை, நேற்று தமக்களித்த வரவேற்பின் போது மேற்கண்டவாறு கூறினர்.

அனலைதீவு கிராமமுன்னேற்றச்சங்கத் தலைவர் புறக்டர் செ. யோகராசா தலைமையில் நடந்த இவ்வரவேற்பின்போது கிராம முன்னேற்றச் சங்கத்தினர் அனலைதீவுக்கு அத்தியாவசியமாகச் செய்யவேண்டிய சில விடயங்களை மகஜர் மூலம் கோரிக்கைகளாகச் சமர்ப்பித்தனர்.

## உள்ளூராட்சி உத்தியோகத்தர்

கொழும்பு, வியா.

"உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் உத்தியோகத்தர்களைத் தற்காலிகமாக வேலைநீக்கஞ் செய்யும் உரிமை நிறுத்தப்பட்டு, இவ்வதிகாரம் உள்ளூர் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்"

மேற்கண்ட தீர்மானம் உள்ளூராட்சி நிர்வாக உத்தியோகத்தர்சங்க ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தலைவர்களுக்கு வழங்கப்பட்ட இவ்வதிகாரத்தினுல் பல ஊழியர்கள் கஷ்டப்படவேண்டிய நிலைமை கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ளதென நுவரேலியா மாநகரசபைக் கமிஷனர் திரு. பீலிக்ஸ் பெர்னுந்தோ தீர்மானம் சம்பந்தமாகப் பேசுகையில் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் தற்காலிக வேலை நீக்கஞ் சம்பந்தமாக விசாரணைகள் நடைபெறுவதற்கு பல மாதங்கள் தாமதமேற்படுவதால் இவ்விசாரணைகளைக் குறுகிய காலத்திற்குள் நடாத்துவதற்கு உள்ளூராட்சிமந்திரி தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அனலைதீவு

## பிரயாணிகள் சங்க நிர்வாகிகள்

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு பிரயாணிகள் சங்க நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க. க. காசிலிங்கம், உப தலைவவர் திரு. ஆ. இரத்தினசபாபதி, காரியதரிசி திரு. ச. அ. நடராசன், உப காரியதரிசி செல்வன் வே. கணேசன், தனுதிகாரி திரு. செ. சிவநேசன். 4 பேர் கொண்ட நிர்வாக அங்கத்தினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சகல மோட்டார் வள்ளங்கள் சேவையிலீடுபடும்.

## இணைப்புப்பாலம் எங்கே?

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு மேற்குப் பகுதிக்குப் போகும் வழியில் பெரியதொரு வாய்க்காலை இணைக்கும் பாலம் எங்கேயென்று தெரியாமல் உள்ளது இதனுல்பாதசாரிகளும் மாணவர்களும் மிகவும் அல்லற்படுகின்றனர். சமீபத்தில் ஏற்பட்ட பெய்மழையாலும், காற்ருலும் இப்பாலம் முற்ருக அழிந்துவிட்டது.

அனலைதீவு கிராமசபை இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## விவசாயிகள் கவலை

பண்டத்தரிப்பு, வியா.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினுலும், காற்றினுலும் பாதிக்கப்பட்ட இப்பகுதி விவசாயிகளுக்கு இதுவரை நிவாரணம் கிடைக்காதது குறித்து அவர்கள் கவலையடைந்துள்ளனர்.

## பழுதான பாலம்

நயினுதீவு. வியா.

இறுப்பிட்டிப்பலம் மிகவும் சேதமுற்ற நிலையிலிருப்பதால் நயினுதிவுக்குப் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் மிகவும் கஷ்டமடையவேண்டியிருக்கிறது. இப்பாலம் மிகவும்பழுதடைந்து பெரும்பகுதிகடலில் அமிழ்ந்தும் விட்டிருக்கின்றது. பாலத்தில் கற்களெல்லாம் வெளிக்கிளம்பியுள்ளதால் காலணிகளில்லாத பிரயாணிகள் பெரும் அவதிப்படவேண்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "விளையாட்டில்ஏற்படும் குரோதங்களை விளையாட்டாகவே கருதவேண்டும்"

## பரிசளிப்பு விழாவில் அறிவுரை

உடுப்பிட்டி, வியாழன் "விளையாட்டு மைதானங்கள் சகல வசதிகளுடனும் இருந்தாலே விளையாட்டுத்துறையின் தரம் உயரும். எத்தகைய போட்டிகளிலும் ஏதாவது ஒரு கோஷ்டி வெற்றி பெறுவது சகஜம். ஆனால் வெற்றி பெறுபவர்கள் தோல்வியுற்றவர்களைக் கேலி செய்ய முயலக்கூடாது. இருசாரரும் போட்டி முடிந்ததும் எவ்வித கோபதாபமுமின்றி விளையாட்டிலே ஏற்பட்ட சிறு குரோதங்களையும் விளையாட்டாகவே கருதவேண்டும். பார்வையாளர்கள் பாரபட்சமின்றி நடந்துகொள்ள வேண்டும். பார்வையாளர்கள் உணர்ச்சி வேகத்தினால் கோஷ்டிபிரிவது போட்டியாளரையே பெரிதும்பாதிக்கும்" என பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜெயசூரியா வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகமைதானத்தில் நடைபெற்ற "பொமேர்ஸ்" விளையாட்டுக்கழக டி. மி. சாமுவேல் ஞாபகார்த்தக் கேடய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதித் தெரிவுப்போட்டி பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினார். இக்கூட்டம் திரு. ஆ. டே. போல் தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் பேசுகையில், வடமராட்சியில் கடந்த ஆண்டுகளைவிட இப்பொழுது விளையாட்டுத்துறை அதிக முன்னேற்றம் அடைந்துள்ளது தமக்குப் பெருமை தருவதாகக்கூறினார். இளம் சமுதாயத்தை வீரர்களாக உருவாக்குவது விளையாட்டுக்களேயாகும். என்றார்.

யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. போல் ஜேசுதாசன் பேசும்போது விளையாட்டுத்துறையில் புதிய நுட்பங்களைப் புகுத்துவதன் மூலமே இளைஞர்களிடையே விளையாட்டில் அதிக ஆர்வத்தையேற் படுத்தவும் விளையாட்டுக்கலையை அபிவிருத்திசெய்யவும் முடியும் என்றார்.

வடமராட்சிப்பகுதிப்பாடசாலைகள் விளையாட்டுப் போதனாசிரியர் திரு. கே. கார்த்திகேசு, கழகச் செயலாளர் திரு ஆ. ஆனந்தராஜா ஆகியோரும் பேசினா.

உதைபந்தாட்டம்

# திருநெல்வேலி - கொக்குவில் போட்டி: வெற்றி-தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், வியாழன் விளையாட்டு அமைச்சின் ஆதரவில் பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் திருநெல்வேலி இந்துவாலிபர் சனசமூக நிலையத்திற்கும் கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையத்திற்குமிடையே 'ஏ' பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் இரு கோஷ்டியினரும் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் மோதியதால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் திருநெல்வேலிக் கோஷ்டியினர் அபாரமாக ஆடினர். அவர்களின் அருமையான பாசிங் ஆட்டம் எதிர்க் கோஷ்டியினரைத் திணறடித்துக்கொண்டிருந்தது. இதன் பயனாக இவர்கள் ஒரு கோலையும் போட்டனர்.

இடைவேளையின்போது கொக்குவில் ஒரு கோலும் போடாதவகையில் திருநெல்வேலி ஒரு கோல்போட்டிருந்தது இடைவேளைக்குப் பின்னர்கொக்குவில்கோஷ்டி எதிர்பாராத விதமாக நன்றாக ஆடியது. எனினும் திருநெல்வேலி மேலும் ஒரு கோல்போட்டது. கொக்குவிலும் விட்டுக்கொடுக்காமல் திறமையாகப் பாசிங் செய்து சூட்டோடு சூடாக இருகோல்களை அடுத்தடுத்து விளாசியது. இப்போட்டி முடிவில் இரு கோஷ்டியினரும் தலா 2—2 கோல்கள் பெற்றமையால் வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தனர். இப்போட்டிக்கு திரு. கோபால் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [வி. நி.]

# 'பொருளாதார துறையில் சனசமூக நிலையங்களின் பணி'

உடுப்பிட்டி, வியா. "சனசமூக நிலையங்கள் சமூகசேவையுடன் நின்றுவிடாது இளைஞர்களைப் பொருளாதாரத் துறையில் ஈடுபடுத்தவேண்டும். கிராமங்களிலிருக்கும் படித்த இளைஞர்கள் கூச்சப்படாமல் விவசாயத்தில் ஈடுபடவேண்டும் சனசமூகநிலையங்கள் ஏழை மக்களின் அறியாமையைப் போக்கவும் கல்வியறிவூட்டவும் முன்மாதிரியாகச் செயல்படவேண்டும். கிராமத்தின் தேவைகளைச் சிரமதான மூலம் பூர்த்திசெய்யலாம். இதற்கு இளைஞர்களின் ஒத்துழைப்பு அவசியம். ஏனோதானோ வென்ற மனப்பான்மை சமுதாயத்தைக் குட்டிச்சுவராக்கி விடும்" என்று புலோலி தெற்கு காந்தியூர் சனசமூக நிலையத்தின் மகாசபைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு. மு. யோகராசா கூறினார்.

இந்நிலையத்தின் முன்னாள் காரியதரிசியான திரு. வே. ஆழ்வாப்பிள்ளை மகாத்மா காந்திஜியின் உருவச்சிலையொன்றை அன்பளிப்பாக வழங்கினார். இச்சிலை நிலைய முன்றலில் நிறுவப்பட்டுள்ளது. திரு. ஆழ்வாப்பிள்ளை பேசுகையில், "காந்தியின் சத்திய நெறிப்படி வாழ்ந்தால் உயர்வு கிடைக்கும். அவரது போதனைகள் ஆத்ம சாந்தியை அளிக்கும்" என்று கூறினார்.

புதிய நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. மு.யோகராசா, உபதலைவர்: திரு. ஆ. கிருஷ்ணர், காரியதரிசி: திரு. பொ. பாலகணேசமூர்த்தி, உபகாரியதரிசி: திரு. ப. தில்லைநாதன், தனாதிகாரி: திரு. கி. இராசரத்தினம், நிர்வாகசபை உறுப்பினர்கள்: திருவாளர்கள் கா. மயில்வாகனம், இ. சிவசுப்பிரமணியம்.

## அபராதம்

வல்வெட்டித்துறை, வியா பருத்தித்துறையைச் சேர்ந்த ஆர். யோகசம்பந்தர் எனபவர் 4 அங்குலக் கத்தி வைத்திருந்தார் என்ற குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. [illegible] னராசா 50 ரூபா அபராதம் அல்லது நான்கு வாரச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# ஆன்ஸ் கழகம் சம்பியன்

பண்டத்தரிப்பு, வியா. வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழக 1-ம் பிரிவு ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்ட சுற்று போ போட்டியில் 'அ' பிரிவு சம்பியனாக இளவாலை செ. ஆன்ஸ் கழகம் தெரிவு செய்யப்பட்டது. ஏனைய பிரிவுகளுடன் இக் கழகம் மோதிக் கொண்ட பின்னர் இறுதிப்போட்டி நடைபெறும்.

சண்டிருப்பாய், இளவாலை சங்கானை, மாதகல், முள்ளானை, விளான், சித்திர மேழி, நவாலி, சுதுமலை ஆகிய இடங்களிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டியில் பங்கு பற்றும்.

# ஸ்டார் வென்றது

உடுவில், வியா. தேசிய வீரர் தினத்தைக் கொண்டாடுமுகமாக உடுவில் ஸ்டார் விளையாட்டுக் கோஷ்டியினருக்கும்கொக்குவில் பிரம்படியைச் சேர்ந்த விளையாட்டுக் கோஷ்டியினருக்குமிடையில் கொக்குவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியொன்றில் ஸ்டார் கோஷ்டி பலத்த போட்டியின்பின் வெற்றிபெற்றது.

இருதரப்பிலும் வீரர்கள் பலமுடன் மோதியதால் இறுதிவரை ஆட்டம்நன்றாக இருந்ததது. எனினும் கடைசி 5 நிமிஷ நேரத்தில் உடுவில் கோஷ்டியின் காப்டன் எம்.ஜி. துரைசிங்கம் ஒருகோலைப் போட்டுத் தமது கோஷ்டிக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தார்.

கே. கந்தசாமி இப்போட்டிக்கு மத்தியட்சம் வகித்தார்.

# ஒலிம்பிக்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவிலான யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்ட 'லீக்' சுற்றுப்போட்டி யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக்கழகத்துக்கும், தெல்லிப்பளை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற முதலாவது 'ஏ' பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை 5—2 கோல்களால் வல்வெட்டித்துறையைத் தோற்கடித்தது.

ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் அருமையாகக் காணப்பட்ட இப்போட்டியில் இடைவேளைக்கு முன்னரே தெல்லிப்பளை 5 கோல்களைப்போட்டது. இடைவேளைக்கு முன் வல்வெட்டித்துறை ஒரு கோலும் போடாதவகையில் ஒலிம்பிக்ஸ் கோஷ்டி 5 கோல்களைப்பெற்றது. இடைவேளைக்குப்பின்னர் நடைபெற்ற போட்டியில் வல்வெட்டித்துறைக் கோஷ்டியில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. அருமையாக ஆடி எதிர்க்கோஷ்டி ஒரு கோலும் போடாத வகையில் 2 கோல்களைப் போட்டது.

இப்போட்டிக்கு திரு. என். தேவபாலன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (வி. நி.)

# வானொலி நிகழ்ச்சிகள்

## வெள்ளி 5-1-68

## இலங்கை

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர் மன்றம்,

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை.

இரவு 6-15 பஜனை — ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோவிலில் இருந்து அஞ்சல், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-30 நேயர் விருப்பம்.

## மதராஸ்-1

காலை 6-00 வந்தேமாதரம், 6-05 துதிப்பாடல்கள், 6-15 திருப்பாவை — திருப்பள்ளி எழுச்சி 6-35 அருள்வாக்கு, 6-45 நாகசுரம் — தட்சணாமூர்த்தி, 7-15 தமிழில் செய்தி, 7-30 காந்தி அஞ்சலி, 8-00 திரைகானம், 8-15 இரண்டாவது உலகத் தமிழ்நாடு கருத்தரங்கின் தொகுப்புரை, 9-15 பாட்டு — மீனாக்ஷி ராமகிருஷ்ணன், 9-45 வாத்திய இசை, 10-00 நாகசுரம் — தட்சணாமூர்த்தி, 10-55 ஆங்கிலத்தில் செய்திகள், 11-55 பிராந்தியச்செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 பாட்டு— ஜானம்மா டேவிட், 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 வாத்தியக்கோஷ்டி, 1-45 திரைகானம், 2-00 தமிழில் செய்தி,

மாலை 5-30 பாடற் பயிற்சி, 5-45 மெல்லிசை.

இரவு 6-30 வாத்திய இசை, 6-45 நேயர்விருப்பம், 7-15 தமிழில் செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 ஓடும் ரயில், 8-30 மாதமொரு மலர், 8-45 வீடும், வெளியும் — தொடர்சித்திரம், 9-15 இரண்டாவது உலகத் தமிழ் மகாநாடு கருத்தரங்கின் தொகுப்புரை, 10-30 திரைகானம்.

## திருச்சி-1

காலை 6-30 வந்தேமாதரம், 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 6-50 பக்திப் பாடல், 7-00 திருப்பாவை— திருப்பள்ளி எழுச்சி, 7-15 தமிழில் செய்தி, 7-30 காந்தி அஞ்சலி, 8-00 ஆங்கிலத்தில் செய்தி, 8-15 இரண்டாவது உலகத் தமிழ் மகாநாடு வானொலி தொகுப்புரை — மதராஸ் அஞ்சல், 11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 ஆங்கிலத்தில் செய்தி, 1-50 இசை மஞ்சரி, 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 நாகசுரம் — என். ஜி. ராஜமாணிக்கம், என். ஜி. கணேசன்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 மாதர் அரங்கம், 6-45 இசைப்பயிற்சி, 7-00 திரைப்படஇசை, 7-15 தமிழில் செய்தி, 7-30 விவசாயிகளுக்கான செய்தி, 8-30 திரைப்படஇசை, 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 இரண்டாவது உலகத் தமிழ் மகாநாடு வானொலி தொகுப்புரை — மதராஸ் அஞ்சல், 10-30 ஆங்கிலத்தில் செய்திகள்.

# சனசமூக நிலைய கோரிக்கை

கோப்பாய் வியாழன் கோப்பாய் சூரியோதய சனசமூக நிலைய நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கவிஞர் திரு. மு. க. சூரியன் தலைமையில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சி. டபிள்யு. ஈ. ஸ்தாபனங்கள் போன்ற கடைகளில் அத்தியாவசிய உப உணவுப் பொருட்களான மல்லி, மிளகாய் போன்றவற்றை ஒரு குறிப்பிட்ட அளவு கூப்பன் இன்றி வழங்கப்படுவது போன்று கிராமப்புறக் கூப்பன் கடைகளிலும் வழங்க ஆவன செய்யுமாறு யாழ். அரசாங்க அதிபரை மகஜர் மூலம் கேட்டுக்கொள்வதென்றும், வடபகுதி உதவி உள்ளூராட்சிஆணையாளராகக்கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு எஸ். வி. மாணிக்கவாசகரின் சேவைக்குப் பாராட்டுத் தெரிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

# ஆருத்ராதரிசனம்

உடுவில், வியா. உடுவில் சிவஞானப் பிள்ளையார் கோவில் திருவெம்பாவைப் பூஜாரம்பம் நாளை ஆரம்பமாகி இம்மாதம் 13ம் திகதி ரதோற்சவமும், அன்று இரவு ஆருத்ரா அபிஷேகமும் நடைபெற்று மறுநாள் உதயத்திற்கு ஆருத்ரா தரிசனமும் நடைபெறும்.

விழாக்காலத்தில் விஷேச சமயப் பிரசங்கங்களும், சொற்பொழிவுகளும், உடுவில் இந்துக்கள் சபையின் ஆதரவில் பஜனைக் கச்சேரியும் நடைபெறும்.


# ஜெனரல் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களை புதுப்பிக்கும் வேலைகளுக்கும்

சகலவிதமான ரப்பர் சாமான்களுக்கும்

தொழில் நிலையங்களுக்குத் தேவையான தற்காலிக கட்டட தளபாடங்கள்

ஆகியவற்றுக்கும்

எம்முடன்தொடர்பு கொள்ளுங்கள்

20, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.

45, அம்பலவாணர் றோட், யாழ்ப்பாணம்

போன்: 7024


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நிவாரண உதவிக்கு ரூ. 3 லட்சம் மட்டுமே

## யாழ். மாவட்டத்துக்கு கிடைத்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணமாவட்டத்தில் சமீபத்தில் ஏற்பட்டபெரு வெள்ளத்தினுல் வீடுவாசல் சொத்துக்களை இழந்த பொதுமக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்கு ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கப்படு மென அரசாங்கம் தெரிவித்திருந்தபோதும் இப்போது மூன்று லட்சம் ரூபாதான் வந்து சேர்ந்துள்ளது. நிவாரண உதவி வழங்கும் வேலைகள் சிலபகுதிகளில் ஆரம்பமாகியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினுல், தமதுவீடுகளையும், உடுபிடவைகளையும், பொருட்களையும் இழந்து பொதுநிலையங்களில் தஞ்சம்புகுந்துள்ளவர்களுக்கு அரசாங்க நிவாரண உதவியளிப்பதற்காக மூன்றுலட்சம் ரூபாய் அனுப்பியிருப்பதாக அறியப்படுகிறது.

இந்த முதலுதவியைத் தொடர்ந்து வீடுகளையும், பொருட்களையும் இழந்த பொதுமக்களுக்கு வெள்ள நிவாரணநிதி உடனடியாக வழங்குவதற்கு கடந்தசகல லீவுநாட்களிலும் சமூகசேவைப்பகுதியினர் ஓய்வின்றி இரவு பகலாக வேலை செய்த காரணத்தினுலேயே நேற்றுத் தொடக்கம் பலஇடங்களில் நிவாரணநிதிவழங்கப்பட்டு வருவதாக சமூகசேவைப்பகுதிஉதவிடைரக்டர் திரு. என். சிவசிதம்பரம் கூறிஞர்

அரசாங்கம் யாழ்ப்பாணம் வெள்ள அகதிகளுக்கென அனுப்பிய மூன்று லட்சம் ரூபாயைத் தொடர்ந்து யாழ்ப்பாணம். தென்மராட்சி, வலிகாமம் வடக்கு ஆகிய காரியாதிகாரிபிரிவுகளில் உள்ள வெள்ள அகதிகளுக்கு சமூகசேவை அதிகாரிகள் நிவாரணநிதியை முதன்முதலாக வழங்க ஆரம்பித்துள்ளதாகவும், இப்பிரிவுகளில் முக்கியமாக சரசாலை. மறவன்புலவு, தச்சன்தோப்பு, கச்சாய், குருநகர், கோப்பாய்வடக்கு, இணுவில் ஏழாலை, ஆகிய இடங்களின் வெள்ள அகதிகளுக்கு நேற்றுவெள்ள நிவாரணப் பணம் வழங்கப்பட்டதாகவும், அதிகாளின் நட்டமதிப்பீட்டின் பிரகாரமே நிவாரணம் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வெள்ள நிவாரணமதிப்பீடு முடிவடைந்த சகல காரியாதிகாரி பிரிவுகளுக்கும் படிப்படியாகநிவாரண நிதி வழங்கப்படுமென்றும் வடபகுதியின் வெள்ளச்சேதத்திற்கு 3லட்சம்ரூபா போதாதாகையால் மேலும் உதவி பெறுவதற்கு இங்கிருந்து ஒரு தூதுகோஷ்டி ஒன்று, கொழும்புக்கு செல்ல விருப்பதாகவும், சமூகசேவைப்பகுதியினர் வடமாகாண எம்.பி.க்கள் அரசாங்க சிரேஷ்ட உத்தியோகஸ்தர்கள் ஆகியோரே இக்கோஷ்டியில் முக்கிய இடம் வகிப்பரென்றும் தெரிய வருகிறது. [விநி,

வெள்ள நிவாரணம் பெறுதற்கு

## வசதி படைத்தவர்களுக்கும் சிபார்சு செய்யப்பட்டதாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினுல் வடபகுதியில் பாதிக்கப்பட்டவர்களென நிவாரணம்பெறச் சிபார்சுசெய்யப்பட்டவர்களில் அநேகரும் இவ்வித நிவாரணம் பெறத் தகுதியற்றவர்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. வசதி படைத்தவர்களும், பெரும் பணக்காரர்களுமே வெள்ள நஷ்டஈடு பெறத் தகுதியற்றவர்களாவர். பெரும் பணக்காரரும் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை உடையவர்களும்கூட தமக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்படவேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாகவும், இவர்களுக்கு நிவாரணம் வழங்க நஷ்ட மதிப்பீடுசெய்த அரசாங்க உத்தியோகத்தர்களும் சிபார்சு செய்திருப்பதாகவும் பின்னர் தெரியவந்ததாக அறியப்படுகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை முதலில் அவ்வப்பகுதிக் கிராமசேவகர்களும் பின்னர் வெள்ள நிவாரண அதிகாரிகளும் மதிப்பீடு செய்ததாகவும், இந்த மதிப்பீட்டின்படி இறுதிப் பரிசீலனைகளைச் சமூகசேவை அதிகாரிகள் மேற்கொண்டபோது மேற்கூறப்பட்ட உண்மை தெரியவந்ததாகவும் இதுசம்பந்தப்பட்ட முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பென்ஷன் பணம் எடுக்கும் ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் அதிகவருமானமுள்ள பல குடும்பங்கள் சேர்ந்து வசிக்கும் சேதமடைந்த வீடுகளுக்கும், பெரிய பணக்காரர்களால் வாடகைக்குக்கொடுக்கப்பட்ட வீடுகளுக்கும், வெள்ள நிவாரணநிதி வழங்குவதற்கு மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வதிகாரி சொன்ஞர்.

ஒரு நிலச் சொந்தக்காரரின் காணியில் தாமாகவே வீடுகட்டியிருந்த பல குடும்பங்களின் வீடுகளும் வெள்ளத்தால் அள்ளப்பட்டுள்ளதாகவும் அவ்வீடுகளுக்கான நிவாரணத்தையும் நிலச்சொந்தக்காரரே பெற்றுக்கொள்ளச் சிபார்சுசெய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளதாகவும் மேலும் அவ்வதிகாரிகுறிப்பிட்டார்.

(வி. நி.)

## [illegible]ணஅறிவித்தல்

யாழ்ப்பாணம் கொக்குவில் சோதிடபரிபாலன மடம் வாக்கிய பஞ்சாங்க கணிதரும், காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ இ. சிவராமலிங்கையரது புத்திரரும், எமது கனிஷ்ட சகோதரருமாகிய பிரம்மஸ்ரீ இ. சி. கங்காதரக் குருக்கள் அவர்கள் 4-1-68 காலை சிவபதமடைந்துள்ளார் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்ருேம். தகனக்கிரியைகள் அவரது இல்லத்தில் 5-1-68 வெள்ளிக்கிழமை நடைபெறும். இ. சி. இரகுநாதையர், பொற்பதி ரோட், கொக்குவில். 2042

## மாணவர்கள் செல்லவில்லை

காங்கேசன்துறை, வியா.

தையிட்டி கணேசவித்தியாலயத்துமாணவர்கள் எவரும் இன்று பாடசாலைக்கு வரவில்லை. இது இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மேற்படி வித்தியாசாலைத் தலைமையாசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபிக்குமுகமாகவே இவர்கள் இவ்வாறு பகிஸ்கரிப்புச் செய்ததாகத் தெரிய வருகிறது.

மாணவர்கள் கல்லூரிக்கு வராதிருந்தபோதிலும் ஆசிரியர்கள் எல்லோரும் வழமைபோல் வந்திருந்தனர்.

### அனலைதீவில் திருவெம்பாவை

அனலைதீவு, வியா.

அனலைதீவுதெற்கு புளியந்தீவு நாகேஸ்வரன் கோவில் திருவெம்பாவை அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகிறது, 10-ம்திகதி பிட்டுக்கு மண்சுமந்தஉற்சவமும், 12ம் திகதி பிச்சாடனஉற்சவமும் 13-ம்திகதி மாங்கனி உற்சவமும், 14-ம்திகதி ஆருத்திரா தரிசனமும் நடைபெறும். இப்பத்துநாட்களும் திருவாதவூரடிகள் புராணபடனமும் நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது. அனலைதீவில் உள்ள ஏனைய கோவில்களில் திருவெம்பாவை முதலாவது பட்சத்தில் ஏற்கனவே முடிவடைந்து விட்டது.

## தேசிய சுவீப்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | N | 0533 | 36 | C | 0477 |
| 23 | X | 0190 | 05 | Y | 0694 |
| 20 | D | 0605 | 53 | P | 0456 |
| 23 | W | 0122 | 47 | N | 0263 |
| 54 | S | 0454 | 10 | P | 0047 |
| 31 | K | 0488 | 38 | T | 0652 |
| 20 | A | 0523 | 42 | Z | 0233 |
| 07 | V | 0504 | 15 | G | 0848 |
| 28 | X | 0438 | 13 | H | 0602 |
| 04 | J | 0273 | 37 | M | 0179 |
| 35 | B | 0170 | 09 | N | 0556 |
| 49 | Q | 0090 | 01 | Q | 0914 |
| 02 | V | 0127 | 32 | H | 0789 |
| 16 | Z | 0804 | 53 | J | 0704 |
| 29 | P | 0776 | 45 | F | 0473 |
| 09 | T | 0609 | 38 | C | 0527 |
| 15 | K | 0225 | 14 | Q | 0248 |
| 11 | T | 0486 | 02 | B | 0574 |
| 15 | N | 0782 | 43 | A | 0576 |
| 34 | B | 0959 | 15 | O | 0085 |
| 43 | T | 0921 | 20 | O | 0485 |
| 07 | C | 0298 | 11 | J | 0587 |
| 52 | E | 0165 | 03 | D | 0052 |
| 48 | P | 0932 | 12 | U | 0778 |
| 23 | G | 0472 | 09 | F | 0917 |
| 48 | Y | 0446 | 38 | H | 0268 |
| 47 | M | 0072 | 18 | Y | 0659 |
| 24 | J | 0825 | 19 | V | 0179 |
| 04 | H | 0968 | 42 | A | 0969 |
| 37 | D | 0516 | 37 | V | 0052 |
| 35 | C | 0224 | 43 | Q | 0541 |
| 41 | R | 0672 | 37 | X | 0838 |
| 04 | P | 0105 | 54 | S | 0248 |
| 42 | E | 0970 | 16 | T | 0058 |
| 32 | H | 0085 | 50 | E | 0034 |
| 25 | S | 0794 | 53 | B | 0321 |
| 19 | S | 0360 | 41 | D | 0894 |
| 20 | Z | 0281 | 48 | U | 0273 |
| 29 | R | 0587 | 02 | C | 0986 |
| 37 | N | 0586 | 26 | E | 0353 |
| 32 | C | 0881 | 14 | Y | 0688 |

[இவை [illegible] படுத்தப்பட வேண்டியவை]

## "இந்திய-பாகிஸ்தான் நல்லுறவுக்கு முயல்வேன்"

### ஷேக் அப்துல்லா கூறுகிருர்

புதுடில்லி, ஜன. 4

சிறையிலிருந்து விடுதலை பெற்ற முன்ஞள் காஷ்மீர் பிரதமரும 'காஷ்மீர்சிங்கம்' என்று அழைக்கப்பட்டவருமானஷேக்அப்துல்லா இன்று பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயுள்ள வேற்றுமைகளை நீக்கி நட்புறவையும் மத ஒற்றுமையையும் ஏற்படுத்த தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளப்போவதாகத் தெரிவித்தார்.

காஷ்மீரின் அமைதியும் செழிப்பும் இந்தியா, பாகிஸ்தான் நல்லுறவில்தான் தங்கியிருக்கிறதென்று ஷேக் அப்துல்லா சொன்ஞர்.

காஷ்மீர் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு திட்டவட்டமான யோசனை எதுவும் தம்மிடம் இல்லை என்றும் அவர் கூறிஞர்.

முன்பு ஸ்ரீநேருவின் அனுமதியுடன் தாம் பாகிஸ்தான் சென்று அதிபர் அயூப்கானைச் சந்தித்துப் பேசியதையும் அவர் நினைவுபடுத்திஞர். சமீபத்தில்பாகிஸ்தான் ஹைகமிஷனரைச் சந்தித்தது பற்றிக் குறிப்பிட்ட ஷேக் அப்துல்லா, தம்மை பாகிஸ்தானுக்கு வருமாறு அவர் கேட்டதாகத் தெரிவித்தார்.

இந்தியா, பாகிஸ்தான் உறவுகள் சீராகவேண்டுமென்பதே தமது விருப்பம் எனக்கூறிய அப்துல்லா இருநாடுகளின் கௌரவத்துக்கும் இழுக்கு ஏற்படாமல் இது நடைபெறவேண்டும் என்ருர்.

## ஒருமாதத்தில்.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி

சாங்கத்திற்கு20சதம் அன்பளிப்பாகக்கொடுக்கிறேன் என ஒவ்வொருவரும் எண்ண வேண்டும். மிகுதி 30 சதத்தை நல்ல வழிகளில செலவு செய்யும் ஒரு லட்சாதிபதியை உருவாக்கக் கொடுக்கிறேன் எனக் கருத வேண்டும். இதனுல் எங்கள் சமுதாயத்தில் புதிய மறுமலர்ச்சி ஏற்பட வசதிபிறக்கும்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபார சங்க நிர்வாக குழுத் தலைவர் டாக்டர் கனகரத்தினம் கூறியதாவது:-

1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் எங்கள் சங்கம் சுவீப் டிக்கெட்டுகளை விற்பனை செய்ய ஆரம்பித்தது. அதன்பின் விற்பனை அதிகமாகியது. யாழ்ப்பாணத்தில் 6 முதல் பரிசுகளும் 2 இரண்டாவது பரிசுகளும், 200 ஆறுதல் பரிசுகளும் விழுந்துள்ளன. சுவீப் டிக்கெட் வாங்குவதன் மூலம் மக்கள் அரசாங்கத்துக்குப் பெரும் உதவிசெய்துவருகிருர்கள்.

முதலாம், இரண்டாம் பரிசுத் தொகைகளைக் குறைத்து ஆறுதல் பரிசுகளை அதிகரிப்பதன் மூலம் இன்னும் பலர் ஆறுதலடைவார்கள் எனக் கருதுகிறேன். இதைப் பற்றி லொத்தர் சபை ஆலோசனைசெய்யவேண்டும்

175-வது சுவீப்பின் முதற் பரிசுக்கான டிக்கெட்டை திருமதி வி. என். நவரத்தினமும், இரண்டாம் பரிசுக்கான டிக்கெட்டை திருமதி ஆர். டி. சிவகுருவும், மூன்ருும் பரிசுக்கான டிக்கெட்டை திரு. எஸ். சுப்பிரமணியமும் இழுத்தார்கள். சுவீப் இழுப்பின் முடிவில் கதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெற்றன

## இடமாற்றம்

கோப்பாய், வியா.

கோப்பாய் சுகாதாரக் கந்தோரின் மேற்பார்வையாளராகக் கடமையாற்றி பொல்காவலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு. கே. ரி. முத்தையாவிற்கு கடந்தமாதம் 31-ம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கோப்பாய் வாசிகளால்இராப்போசன விருந்தும் இம்மாதம் 1-ம் திகதி கோப்பாய் சுகாதாரக் கந்தோர் ஊழியர்களால் மதிய போசன விருந்தும் அளிக்கப்பட்டது,

## குரங்கு, பன்றி இருதயம்

### மனிதனுக்குப் பொருத்தப்படும்

டர்பன், ஜன. 4

வருங்காலத்தில்வாலில்லா குரங்கு, பன்றி ஆகியவைகளின் இருதயத்தையும் மனிதனுக்குப் பொருத்தக்கூடிய நிலை ஏற்படலாம் என்று மனிதனின் இருதயத்தை சத்திர சிகிச்சை மூலம் மாற்றிவைத்து உலக சாதனை ஏற்படுத்தியிருக்கும் தென்ஞபிரிக்க டாக்டர் பாஞர்ட் தெரிவித்திருக்கிருர்.

வண்ணை

## வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் தினமும் காலை 5 மணிக்கு திருப்பள்ளி எழுச்சி நடைபெறுகிறது. அதைத்தொடர்ந்து பஜனைச் சபையினரால் மூன்று வீதிகளிலும் திருப்பள்ளி எழுச்சிப் பஜனை நடைபெறுகிறது.

பஜனை பாடுகின்றவர்களுக்கு தைப்பொங்கல் தினத்தன்று, தங்கப்பதக்கங்களும் பரிசில்களாக வழங்கப்படுமெனத் தெரியவருகிறது

இன்று காலை ஆறு மணி தொடக்கம் இரவு 7 மணி வரை ஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளின் சொற்பொழிவும் பின்னர் பஜனையும் நடைபெறும். இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும். பின்னர் உள் வீதி வலமும் நடைபெறும்.

## அறிவித்தல்

முன்னர் எமது பிரதிநிதியாகவும், விளம்பரம் சேகரிப்பவராகவும் கடமையாற்றிய திரு. எஸ். பி. சந்திரசேகரம் என்பவர் இப்போது எமது ஸ்தாபனத்தில் இல்லையென்பதையும் அவருடன் எமது ஸ்தாபனம் சார்பாக எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ளவேண்டாமென்றும் எமது வாடிக்கையாளர்களுக்கு அறிவித்துக்கொள்கிருேம். அவருடன் செய்துகொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நாங்கள் பாத்திரவாளிகளாகமாட்டோம்.

ஈழநாடு லிமிட்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org